# தினபூமி

thinaboomi.com

பூமி: 26 சுற்று: 124 புரட்டாசி 28

Regd. No.TN/WR/SLM(E)/14/2017-2019 RNI Regn. No. TNTAM/2001/4003

சேலம், செவ்வாய், அக்டோபர் 14, 2025 ‣ சென்னை ‣ மதுரை ‣ திருச்சி ‣ கோவை ‣ நெல்லை ‣ சேலம் ‣ வேலூர் ‣ புதுச்சேரி பக்கம் 8 ₹ 3.00


# முதலாமாண்டு நினைவு அஞ்சலி



தோற்றம்: 20.11.1955

மறைவு: 14.10.2024

## திரு. எஸ்.மணிமாறன் அவர்கள்

நிறுவனர், அதிர்ஷ்டம் - தினபூமி நாளிதழ்

விடாமுயற்சியால் ஏற்றம் கண்ட அறிவின் சுடரொளியே,
அன்பின் அடைக்கலமே, பொறுமையின் சிகரமே,
உறவுகளின் உறைவிடமே, ஈகை பெருந்தகை
மாமனிதர் வள்ளலின் வழிவந்த மனிதகுல மாணிக்கமே,
ஊடகத்துறையின் ஒளியே
உங்களின் முதலாம் ஆண்டு நினைவு நாளில்
எங்களின் அன்பான வணக்கங்கள்
உங்களின் ஆசி எப்போதும் எங்களை வழிநடத்தும்

பிரிவால் வாடும்.... குடும்பத்தினர் மற்றும் தினபூமி ஊழியர்கள்

**மார்க்கெட் விலை நிலவரம்**

BSE -173.77 பாயிண்ட் 82,327.05
NSE -58.00 பாயிண்ட் 25,227.35

**தங்கம்** 1 சவரன் ₹92,640 · 1 கிராம் ₹11,580

**வெள்ளி** 1 கிலோ ₹197,000 · 1 கிராம் ₹197.00

**டாலர்** ₹88.67


**பெட்ரோல்** ₹100.75 · **டீசல்** ₹92.34

# 2025-பொருளாதாரத்திற்கான நோபல் பரிசு 3 பேருக்கு அறிவிப்பு

**ஸ்டாக்ஹோம், அக். 14-**

2025-ம் ஆண்டின் பொருளாதாரத்திற்கான நோபல் பரிசு 3 பேருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

உலகின் மிகவும் உயர்ந்த நோபல் பரிசுகள் அறிவிக்கப்பட்டு வருகின்றன. மருத்துவம், இயற்பியல், வேதியியல், இலக்கியம் மற்றும் அமைதிக்கான நோபல் பரிசுக்குரியவர்கள் கடந்த வாரத்தில் அறிவிக்கப்பட்டனர்.



இந்த நிலையில் 2025-ம் ஆண்டின் பொருளாதாரத்திற்கான நோபல் பரிசு நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி புதுமை சார்ந்த பொருளாதார வளர்ச்சியை விளக்கியதற்காக பொருளாதாரத்திற்கான நோபல் பரிசு ஜோயல் மோகிர், பிலிப் அகியோன் மற்றும் பீட்டர் ஹோவிட் ஆகியோருக்கு கூட்டாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தொழில்நுட்ப முன்னேற்றத்தின் மூலம் நீடித்த வளர்ச்சிக்கான முன்நிபந்தனைகளை அடையாளம் கண்டதற்காக ஜோயல் மோகிருக்கும், படைப்பு அழிவின் மூலம் நீடித்த வளர்ச்சியின் கோட்பாட்டிற்காக அகியோன் மற்றும் ஹோவிட்டுக்கும் பொருளாதாரத்திற்கான நோபல் பரிசு வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 2 வருடங்களாக ஹமாஸ் பிடியில் இருந்த
# 20 இஸ்ரேலிய பணயக்கைதிகள் விடுவிப்பு

**காசா, அக். 14-**

ஹமாஸ் வசம் இருந்த அனைத்து பணயக்கைதிகளும் விடுவிப்பு செய்யப்பட்டனர்.



மேற்கு ஆசிய நாடான இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்தின் காசாவில் உள்ள ஹமாஸ் அமைப்பினருக்கும் இடையே 2023 அக்டோபர் மாதம் முதல் போர் தொடங்கியது. ஹமாஸ் அமைப்பினரை ஒழிக்காமல் ஓயமாட்டோம் என்று கூறி, இஸ்ரேல் தனது முழு பலத்தையும் கொண்டு காசா மீது தாக்குதல் நடத்தியது. இதில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர்.

இரண்டு ஆண்டுகளாக நீடித்து வரும் இந்தப் போரை முடிவுக்கு கொண்டு வர அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் தீவிர முயற்சி மேற்கொண்டன. "அமைதி ஒப்பந்தத்தை ஹமாஸ் ஏற்க வேண்டும்; கைதிகளை விடுவிக்க வேண்டும்" என டிரம்ப் கெடு விதித்திருந்தார். இதையடுத்து மூன்று நாட்களாக அமைதி பேச்சு வார்த்தை நடைபெற்றது. அதில் சுமூகமான முடிவு எடுக்கப்பட்டதை அடுத்து, இஸ்ரேல் – ஹமாஸ் இடையே கடந்த 10-ம் தேதி முதல் தற்காலிக போர் நிறுத்தம் அமலுக்கு வந்தது.

இதன் தொடர்ச்சியாக, காசா போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கான இறுதி கட்ட ஒப்பந்தம் எகிப்தில் நேற்று கையெழுத்தாகவுள்ளது. தற்போது காசா போர் நிறுத்தத்தின் எதிரொலியாக, தங்கள் வசம் இருந்த பணயக்கைதிகள் (20 பேர்) அனைவரையும் ஹமாஸ் அமைப்பு விடுதலை செய்துள்ளது.

ஹமாஸ் அமைப்பினரால் விடுவிக்கப்பட்ட இஸ்ரேலிய பணயக்கைதிகளுக்கு வழிநெடுகிலும் வரவேற்பு அளிக்கப்பட்டது.

பணயக்கைதிகளாக இருந்தவர்கள் இரண்டு ஆண்டுகளுக்கு பிறகு வெளியே வந்ததால், அவர்களின் குடும்பத்தினர் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

### இஸ்ரேல் ராணுவம் உறுதி


டிரம்ப் முன்மொழிந்த அமைதி ஒப்பந்தத்தை இஸ்ரேல் - ஹமாஸ் தரப்புகள் ஏற்றுக் கொண்டன. அதன்படி, போர் நிறுத்தமும் அமலுக்கு வந்துள்ளது. இந்நிலையில், பிணைக் கைதிகள் விடுவிப்பு தொடங்கியுள்ளது. இதுவரை ஹமாஸ் உயிருடன் உள்ளா 20 பிணைக் கைதிகளை விடுவித்துள்ளதாக இஸ்ரேல் ராணுவம் உறுதிப்படுத்தியுள்ளது. இதற்குப் பதிலாக இஸ்ரேல் தனது சிறைகளில் உள்ள நூறுக்கணக்கான பாலஸ்தீன கைதிகளை விடுவிக்க உள்ளது.

# இந்தோனேஷிய பெண்ணை கரம்பிடித்த தமிழக வாலிபர்

**திருவாரூர், அக். 14-**

இந்தோனேஷிய பெண்ணை திருவாரூர் வாலிபர் கரம்பிடித்த சுவாரஸ்ய சம்பவம் நடந்துள்ளது.

திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டை அருகே உள்ள கரையாங்காடு கிராமத்தை சேர்ந்தவர் சோமசுந்தரம். இவருடைய மனைவி வாசுகி. இவர்களுடைய மகன் யோகதாஸ் (வயது30). இவர் சிங்கப்பூரில் உள்ள தனியார் நிறுவனத்தில் மேலாளராக கடந்த 10 ஆண்டுகளாக பணிபுரிந்து வருகிறார். அதே நிறுவனத்தில் இந்தோனேஷிய நாட்டின் அமானுபன்பாரத் பகுதியை சேர்ந்த டேனியல் டிபு- மாதா நியோநானே தம்பதியின் மகள் டயானா டீபு (26) என்ற பெண் வேலை பார்த்து வருகிறார். இவருக்கும், யோகதாசுக்கும் இடையே நட்பு ஏற்பட்டது. இருவரும் நட்பாக பழகி வந்த நிலையில் டயானா டீபு யோகதாஸ் மீது காதல் வயப்பட்டார். தனது காதலை டயானா டீபு யோகதாசிடம் தெரிவித்துள்ளார். அவருடைய காதலை யோகதாசும் மனமுவந்து ஏற்றுக்கொண்டார். 2 பேரும் கடந்த 8 ஆண்டுகளாக காதலித்து வந்தனர்.



காதல் ஜோடி 2 பேரும் இரு வீட்டார் சம்மதத்துடன் இந்து முறைப்படி திருமணம் செய்து கொள்ள முடிவு செய்து, பெற்றோரிடம் காதல் விவரத்தை தெரிவித்தனர். இரு வீட்டு பெற்றோரும் சம்மதம் கூறியுள்ளனர். டயானா டீபு இந்து முறைப்படி தமிழ் கலாசார அடிப்படையில் யோகதாசை கரம் பிடிக்க ஆசைப்பட்டார். இதையடுத்து இருவருக்கும் சிங்கப்பூரில் கடந்த மாதம் (செப்டம்பர்) திருமண நிச்சயதார்த்தம் நடந்தது. திருமணத்தை தமிழ்நாட்டில் உள்ள ஒரு கோவிலில் நடத்த முடிவு செய்து திருமண அழைப்பிதழ் அச்சடித்து உறவினர், நண்பர்கள், கிராம மக்கள் அனைவருக்கும் யோகதாஸ் கொடுத்தார்.

கடந்த வாரம் அவர் தனது சொந்த ஊரான முத்துப்பேட்டை அருகே உள்ள கரையங்காடு கிராமத்துக்கு டயானா டீபுவுடன் வந்தார். நிச்சயித்தபடி திருமணம் நேற்று முன்தினம் அங்குள்ள கரை முத்து மாரியம்மன் கோவிலில் மிக எளிமையான முறையில் நடந்தது. பட்டு சேலை அணிந்து தமிழ்ப்பெண் போல் இருந்த டயானா டீபுவுக்கு யோகதாஸ் தாலி கட்டினார். தொடர்ந்து அம்மி மிதித்து, அருந்ததி பார்க்கும் நிகழ்ச்சி நடந்தது. விழாவில் உறவினர்கள், கிராம மக்கள், நண்பர்கள் திரளாக பங்கேற்று மணமக்களுக்கு வாழ்த்து தெரிவித்தனர்.

# அமெரிக்காவில் துப்பாக்கி சூடு: 4 பேர் பலி

**தெற்கு கரோலினா, அக். 14-**

அமெரிக்காவில் பாரில் நடைபெற்ற துப்பாக்கி சூட்டில் 4 பேர் உயிரிழந்தனர்.

அமெரிக்காவின் தெற்கு கரோலினாவில் செயின்ட் ஹெலினா தீவு பகுதியில் உணவு விடுதியுடன் கூடிய பார் ஒன்று உள்ளது. இதில், மதுபானங்களுடன் உணவு வகைகளும் விற்பனை செய்யப்படும். இதில், பலர் ஒன்றாக மது அருந்தி கொண்டிருந்தபோது, திடீரென சிலர் துப்பாக்கிகளால் பலமுறை சுட்டுள்ளனர். இதில் பலர் பலத்த காயமடைந்தனர். துப்பாக்கி குண்டு வெடிக்கும் சத்தம் கேட்டதும் பாரில் இருந்தவர்கள் அலறியடித்து தப்பியோடினார்கள். சம்பவம் நடந்தபோது, நூற்றுக்கணக்கானோர் அந்த பாரில் இருந்துள்ளனர்.

அவர்களில் பலர் அடைக்கலம் தேடி, அருகேயுள்ள கடைகளுக்குள்ளும், கட்டிடங்களுக்கு உள்ளேயும் புகுந்தனர். இந்த துப்பாக்கி சூட்டில் 4 பேர் பலியானார்கள். 20 பேர் வரை காயமடைந்தனர்.

4 பேரின் நிலைமை கவலைக்குரிய வகையில் உள்ளது. சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. இதுபற்றி தகவல் அறிந்து அவசரகால மருத்துவ பணியாளர்கள் உடனடியாக வந்து, காயமடைந்த நபர்களை மீட்டு சிகிச்சைக்கு கொண்டு சென்றனர்.

# தென்ஆப்பிரிக்காவில் சோகம்: பேருந்து விபத்தில் 42 பேர் பலி

**ஜோகன்னஸ்பர்க், அக். 14-**

தென்ஆப்பிரிக்காவில் பேருந்து விபத்தில் 42 பேர் உயிரிழந்த சோகம் சம்பவம் அரங்கேறியுள்ளது.

தென்ஆப்பிரிக்காவின் தெற்கே ஈஸ்டர்ன் கேப் பகுதியில் இருந்து வடக்கே பிரிட்டோரியா தலைநகரில் இருந்து 400 கி.மீட்டர் தொலைவில் உளள லூயிஸ் டிரைகார்ட் நகரருகே என்1 நெடுஞ்சாலையில் பஸ் ஒன்று சென்று கொண்டிருந்தது. அந்த பஸ் மலைப்பாங்கான பகுதியில் சென்றபோது, திடீரென ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்து சாலையில் இருந்து விலகி பள்ளத்தில் உருண்டது. மலையடிவார பகுதியில் விழுந்தது. இந்த சம்பவத்தில், தலைகுப்புற பஸ் கவிழ்ந்துள்ளது. இந்த விபத்தில் சிக்கி பயணிகள் உள்ளிட்ட 42 பேர் பலியானார்கள்.

அவர்களில் ஜிம்பாப்வே மற்றும் மாளவி நாடுகளை சேர்ந்த பலர் உள்ளனர். சொந்த ஊருக்கு அவர்கள் சென்றபோது இந்த விபத்து ஏற்பட்டு உள்ளது. இதனை தொடர்ந்து அவசரகால குழுவினர் சம்பவ பகுதிக்கு சென்று மீட்பு பணிகளில் ஈடுபட்டனர். விபத்தில் பலர் காயமடைந்தனர். அவர்கள் சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டனர்.

# பாக் - ஆப்கான் இடையேயான போரையும் நிறுத்துவேன்: டிரம்ப்

**வாஷிங்டன், அக். 14-**

இஸ்ரேல்-ஹமாஸ் போர் நிறுத்த ஒப்பந்தத்தைத் தொடர்ந்து அமெரிக்க அதிபர் டிரம்ப் முதல்முறையாக இஸ்ரேல் புறப்பட்டுச் சென்றார்.

ஹமாஸ் அமைப்பால் பிடித்து வைக்கப்பட்டுள்ள பணயக் கைதிகளின் குடும்பத்தினரை சந்திக்கும் டிரம்ப், இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகுவை சந்தித்து, அந்நாட்டு நாடாளுமன்றத்தில் உரையாற்றுகிறார். இஸ்ரேல் பயணத்தை முடித்துக் கொண்டு டிரம்ப் அங்கிருந்து எகிப்து செல்கிறார்.

இதனிடையே செய்தியாளர்களிடம் பேசிய டிரம்ப், "போர்களைத் தீர்ப்பதில் சிறந்தவன் நான். பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் இடையே போர் நடப்பதாக கேள்விப்பட்டேன். மத்திய கிழக்கு பயணத்தை முடித்துக் கொண்டு அமெரிக்கா திரும்பியதும், அதையும் நிறுத்துவேன். காசா போர் என்பது நான் தீர்த்து வைத்த 8-வது போராகும்" என்று தெரிவித்தார்.

# இஸ்ரேல் பாராளுமன்றத்தில் டிரம்ப்புக்கு உற்சாக வரவேற்பு

**இஸ்ரேல், அக். 14-**

இஸ்ரேல்- ஹமாஸ் இடையே போர் நிறுத்தம் ஏற்பட்டுள்ளது. ஹமாஸ் 20 பணயக்கைதிகளை விடுவித்துள்ளது. அதற்கு இணையான இஸ்ரேல், சிறையில் உள்ள பாலஸ்தீன கைதிகளை விடுதலை செய்துள்ளது.

இஸ்ரேல்- காசா (ஹமாஸ்) இடையிலான அமைதி அமைதி ஒப்பந்தத்தை இறுதி செய்யும் காசா அமைதி உச்சி மாநாடு நடக்கிறது எகிப்தில் நடைபெறுகிறது. இதில் டொனால்டு டிரம்ப் கலந்து கொள்கிறார்.

இதற்கான அமெரிக்காவில் இருந்து புறப்பட்ட அவர், இஸ்ரேல் நாட்டிற்கு சென்றுள்ளார். இஸ்ரேல் நாட்டில் அவருக்கு சிவப்பு கம்பளம் வரவேற்பு அளிக்கப்பட்டது. இஸ்ரேல் சென்ற டொனால்டு டிரம்ப், அந்நாட்டின் பாராளுமன்றத்தில் உரையாற்றுவதற்காக சென்றார். அப்போது இஸ்ரேல் பாராளுமன்ற உறுப்பினர் எழுந்து நின்று, உலகிற்கு அதிக டிரம்ப்கள் தேவை" என உற்சாக வரவேற்பு அளித்தனர்.

**14-10-2025**



## இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** மகிழ்ச்சி நிறைந்த நாளாக அமையும். விரும்பிய பொருட்கள் வீடு வந்து சேரும். ஆணையிடும் அதிகார பதவி கிடைக்கும். வீட்டில் வசதி வாய்ப்புகள் அதிகரிக்கும்.

**ரிஷபம்:-** குடும்ப உறுப்பினர்கள் தேவை அறிந்து செயல்படுவீர்கள். சமூக விழிப்புணர்வுடன் செயல்படுவீர்கள். தொழில் வியாபாரத்தில் கடின உழைப்பால் பணவரவு திருப்திகரமாக இருக்கும்.

**மிதுனம்:-** இன்று, புதிய சொத்துக்கள் சேரும். மாணவர்களுக்கு படிப்பில் ஆர்வம் அதிகரிக்கும். பெற்றோரின் ஆரோக்கியம் மேம்படும். வியாபாரிகள் வாடிக்கையாளரை கவர பரிசு திட்டங்களை அறிவிப்பது . சிறப்பு.

**கடகம்:-** குடும்பத்தில் அற்ப ஆசைகள் காரணமாக வீண் செலவுகள் ஏற்படும். பணியாளர்கள் தேவையற்ற காரியங்களில் ஈடுபட்டு வீண் பிரச்சனைகளுக்கு வழிவகுப்பர். என்னதான் உழைத்தாலும் ஆதாயம் பூஜ்யமாகும்.

**சிம்மம்:-** அரசு வேலை கிடைக்க வாய்ப்பு ஏற்படும். தொழிலில் அதிக முதலீடு செய்து ஆதாயம் பெறுவீர்கள். விளம்பரங்கள் மூலம் உங்கள் நிறுவனம் புகழ் பெறும். பதவி உயர்வுகள் எதிர்பார்க்கலாம்.

**கன்னி:-** தர்ம காரிய ஈடுபாடு வாழ்க்கையில் புதிய திருப்பங்களை ஏற்படுத்தும். எடுத்த காரியம் அனைத்திலும் வெற்றி கிட்டும். பல வழிகளிலும் அதிக தனலாபம் கிடைக்கும்.

**துலாம்:-** கோபத்தாலும், மனைவியின் கலக குணத்தாலும், உறவுகளுக்குள் குழப்பமும், பிரிவும் ஏற்படலாம். உயர் அதிகாரிகளிடம் பணிவாக நடந்தால் அனுகூலமான ஆதாயங்கள் கிடைக்கும்.

**விருச்சிகம்:-** இன்று, சுமாரான பணவரவு உள்ள நாள். மன சஞ்சலங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. சிலருக்கு வழக்குகளால் வீண் செலவுகள் ஏற்படலாம். எடுத்த காரியங்களில் தாமதங்கள் ஏற்படும்.

**தனுசு:-** பலவழிகளிலும் பணவரவு எதிர்பார்த்தபடி இருக்கும். காதலில் வெற்றி கிடைக்கும். கனிவான பேச்சால் காரியங்களை சாதிப்பீர்கள். மனதுக்குப் பிடித்த நவீன புத்தாடைகள் வாங்குவீர்கள்.

**மகரம்:-** இன்று, தன வரவு கூடும். நோய் நீங்கி ஆரோக்கியம் பெருகும். எல்லா வகையிலும் நல்லதே நடக்கும். வியாபாரிகளுக்கு தொழில் விருத்தி ஏற்படும். பெயரும், புகழும் அதிகரிக்கும்.

**கும்பம்:-** இன்று, பயணங்கள் மற்றும் செயல்பாடுகளில் தடைகள் ஏற்படலாம். வெற்றிக்கு வழி இல்லாத வகையில் வேதனைகளும் ஏற்படும். குழந்தைகளுக்கு சிறு உடல் உபாதைகள் ஏற்படலாம்.

**மீனம்:-** இன்று, உங்கள் பொருட்கள் அனைத்தையும் பத்திரப் படுத்திக் கொள்வது நல்லது. தாயின் உடல் நிலையில் மிகுந்த அக்கறை தேவை. வாகன சுகம் ஏற்படும்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறைக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் உதவி பொறியாளர் , இளநிலை வரைதொழில் அலுவலர் மற்றும் உதவியாளர் பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்ட 83 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

## கரூர் நெரிசல் வழக்கில்
# சுப்ரீம் கோர்ட் வழங்கிய தீர்ப்பு இடைக்காலம்தான்: வில்சன்

**புதுடெல்லி, அக். 14-**

கரூர் வழக்கில் சுப்ரீம் கோர்ட் வழங்கியது இடைக்கால தீர்ப்புதான் என்று வழக்கறிஞர் வில்சன் தெரிவித்தார்.



கரூரில் த.வெ.க. தலைவர் விஜய் கடந்த மாதம் 27-ந் தேதி பிரசாரம் செய்தபோது கூட்ட நெரிசல் ஏற்பட்டது. இதில் பெண்கள், குழந்தைகள் உள்பட 41 பேர் பலியான சம்பவம் நாட்டையே உலுக்கியது. இந்த சம்பவம் தொடர்பான வழக்கை சிபிஐ விசாரிக்க சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்டுள்ளது.

இந்த நிலையில், தீர்ப்புக்கு பின் டெல்லியில் திமுக எம்.பி.யும் மூத்த வழக்கறிஞருமான பி.வில்சன் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:-

கரூர் கூட்ட நெரிசல் வழக்கை சிபிஐக்கு மாற்றியிருப்பது இடைக்கால உத்தரவுதான். நிரந்தர உத்தரவு அல்ல. அருணா ஜெகதீசன் ஆணையம் முக்கியமானது. அந்த ஆணைய விசாரணையை உச்சநீதிமன்றம் எதுவும் சொல்லவில்லை. அருணா ஜெகதீசன் ஆணைய விசாரணை தொடரும். கரூரில் பாதிக்கப்பட்டவர்களுக்கு என்ன நிவாரணம்?. யார் மீது தவறு உள்ளது?, யாரிடம் கவனக்குறைவு இருந்தது? என்பதை சொல்லக்கூடிய முக்கியமான ஆணையம்.

சிறப்பு புலனாய்வுக்குழு இதுவரை என்ன விசாரித்தார்களோ அதனை டிரான்ஸ்பர் செய்ய சொல்லி சுப்ரீம் கோர்ட் கூறியுள்ளது. கரூர் துயரம் தொடர்பாக சுப்ரீம் கோர்ட்டில் இரண்டு நபர்கள் தங்கள் அனுமதி இல்லாமல் போலியாக ஒரு மனு தாக்கல் செய்துள்ளதாக புகார் அளித்துள்ளனர். இந்த விவகாரம் தொடர்பாக தனியாக மனு தாக்கல் செய்ய கோர்ட் அறிவுறுத்தி இருக்கிறது. ஒரு வேளை அந்த மனுக்கள் போலியானதாக தாக்கல் செய்யப்பட்டு இருந்தால், தற்போதைய உத்தரவை நீதிமன்றம் ரத்து செய்யும். சிபிஐ கிரிமினல் வழக்காக பதிவு செய்து விசாரிக்கும்.

சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவியாக இருக்காது. கூட்ட நெரிசல் வழக்கில் இறுதி உத்தரவு என்ன என்பதை பொறுத்திருந்து பார்க்கலாம். கரூர் நெரிசல் வழக்கில் சென்னை ஐகோர்ட்டிற்கு தமிழ்நாடு அரசு அழுத்தம் கொடுத்து உத்தரவை பெற்றது என ஆதவ் அர்ஜூனா கூறியது நீதிமன்ற அவமதிப்பு. நீதிமன்றத்தை இவ்வாறு குறை சொல்வதை ஏற்றுக்கொள்ள முடியாது. இவ்வாறு அவர் கூறினார்.

# தங்கம் விலை மீண்டும் வரலாறு காணாத உச்சம்
## ஒரு பவுன் 92,640-க்கு விற்பனை

**சென்னை, அக். 14-**

தங்கம் விலை நேற்று வரலாறு காணாத புதிய உச்சத்தை அடைந்துள்ளது. அதன்படி, கிராமுக்கு ரூ.25 அதிகரித்து ஒரு கிராம் ரூ.15,525-க்கும், பவுனுக்கு ரூ.640 அதிகரித்து ஒரு பவுன் 92,640-க்கும் விற்பனையாது. வெள்ளி விலையும் ஒரே நாளில் கிலோவிற்கு ரூ.7 ஆயிரம் உயர்ந்துள்ளது.

**கடந்த 5 நாட்கள் விலை நிலவரம்:**

| | | | |
|---|---|---|---|
| 1) | 13.10.2025 | ஒரு சவரன் | ரூ.92,200. |
| 2) | 11.10.2025 | ஒரு சவரன் | ரூ.92,000. |
| 3) | 10.10.2025 | ஒரு சவரன் | ரூ.90,720. |
| 4) | 09.10.2025 | ஒரு சவரன் | ரூ.91,400. |
| 5) | 08.10.2025 | ஒரு சவரன் | ரூ.91,080. |

தங்கம் விலை தொடர்ந்து போக்கு காட்டி வருகிறது. கிடுகிடுவென அதிகரிப்பதும், பின்னர் சற்று சரிவதும் என்ற நிலையிலேயே பயணிக்கிறது. அதிலும் கடந்த சில நாட்களாக ஒரே நாளில் 2 முறை விலை மாற்றத்தையும் சந்திக்கிறது. அந்தவகையில் கடந்த 3 நாட்களுக்கு முன் காலையில் கிராமுக்கு ரூ.85-ம், பவுனுக்கு ரூ.680-ம் உயர்ந்து இருந்தது.

இதேபோல் பிற்பகலில் கிராமுக்கு ரூ.75-ம், பவுனுக்கு ரூ.600-ம் அதிகரித்து இருந்தது. ஒரே நாளில் மட்டும் கிராமுக்கு ரூ.160-ம், பவுனுக்கு ரூ.1,280-ம் உயர்ந்து, ஒரு கிராம் ரூ.11 ஆயிரத்து 500-க்கும், ஒரு பவுன் ரூ.92 ஆயிரத்துக்கும் விற்பனை ஆனது.

இந்த நிலையில், நேற்று தங்கம் விலை வரலாறு காணாத புதிய உச்சத்தை அடைந்துள்ளது. அதன்படி, கிராமுக்கு ரூ.25 அதிகரித்து ஒரு கிராம் ரூ.15,525-க்கும், பவுனுக்கு ரூ.200 அதிகரித்து ஒரு பவுன் 92,200-க்கும் விற்பனையாது. கடந்த சில வாரங்களாக தினமும் இரு முறை தங்கம் விலை உயர்ந்து வரும் நிலையில் நேற்றும் தங்கம் விலை இரண்டு முறை உயர்ந்தது. நேற்று காலை தங்கம் விலை பவுனுக்கு ரூ.200 உயர்ந்த நிலையில், பிற்பகலில் ரூ.440 உயர்ந்துள்ளது இதன்படி, ஒரு பவுன் ரூ.640 உயர்ந்து ரூ.92,640 க்கு விற்பனையானது. இதன் மூலம் தங்கம் விலை வரலாறு காணாத உச்சத்தை தொட்டுள்ளது.

தங்கம் விலையை காட்டிலும், வெள்ளி விலைதான் பந்தயத்தில் வேகமாக முன்னேறுகிறது. நேற்று கிராமுக்கு ரூ.5-ம், கிலோவுக்கு ரூ.5 ஆயிரமும் உயர்ந்து, ஒரு கிராம் ரூ.195-க்கும், ஒரு கிலோ ரூ.1 லட்சத்து 95 ஆயிரத்துக்கும் விற்பனையானது. பிற்பகலில் மேலும் 2 ஆயிரம் உயர்ந்தது.

இதன்படி ஒரு கிலோ வெள்ளி ரூ.1 லட்சத்து 97 ஆயிரமாக உயர்ந்துள்ளது. இதன்மூலம் நேற்று ஒரே நாளில் வெள்ளி விலை கிலோவிற்கு ரூ.7 ஆயிரம் உயர்ந்துள்ளது.

# தூத்துக்குடி-பெங்களூரு இடையே சிறப்பு ரெயில்

**சென்னை, அக். 14-**

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு தூத்துக்குடி-பெங்களூரு இடையே சிறப்பு ரெயில் இயக்கப்படுகிறது.

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு, பயணிகளின் வசதிக்காகவும், கூட்ட நெரிசலை தடுக்கவும் சிறப்பு ரெயில்கள் இயக்கப்பட உள்ளது. இதுகுறித்து தெற்கு ரெயில்வே வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

பெங்களூருவில் இருந்து வருகிற 16-ந்தேதி மாலை 3 மணிக்கு புறப்பட்டு கொல்லம் செல்லும் சிறப்பு ரெயில் (வண்டி எண்.06561), சேலம், ஈரோடு, திருப்பூர், போத்தனூர் வழியாக மறுநாள் காலை 6.20 மணிக்கு கொல்லம் சென்றடையும். மறுமார்க்கமாக, கொல்லத்தில் இருந்து வருகிற 17-ந்தேதி காலை 10.45 மணிக்கு புறப்பட்டு பெங்களூரு செல்லும் சிறப்பு ரெயில் (06562), மேற்கண்ட வழித்தடம் வழியாக மறுநாள் அதிகாலை 3.30 மணிக்கு பெங்களூரு சென்றடையும்.

பெங்களூருவில் இருந்து வருகிற 21-ந்தேதி இரவு 11 மணிக்கு புறப்பட்டு கொல்லம் செல்லும் சிறப்பு ரெயில் (06567), சேலம், ஈரோடு, திருப்பூர், போத்தனூர் வழியாக மறுநாள் மதியம் 12.55 மணிக்கு கொல்லம் சென்றடையும். மறுமார்க்கமாக, கொல்லத்தில் இருந்து வருகிற 22-ந் தேதி மாலை 5 மணிக்கு புறப்பட்டு பெங்களூரு செல்லும் சிறப்பு ரெயில் (06568), மேற்கண்ட வழித்தடம் வழியாக மறுநாள் காலை 9.45 மணிக்கு பெங்களூரு சென்றடையும்.

பெங்களூருவில் இருந்து வருகிற 17, 21 ஆகிய தேதிகளில் இரவு 10 மணிக்கு புறப்பட்டு தூத்துக்குடி வரும் சிறப்பு ரெயில் (06297), சேலம், நாமக்கல், கரூர், திண்டுக்கல், கொடைக்கானல் சாலை, சோழவந்தான், மதுரை, திருப்பரங்குன்றம், திருமங்கலம், விருதுநகர், சாத்தூர், கோவில்பட்டி, தூத்துக்குடி மேலூர் வழியாக மறுநாள் காலை 11 மணிக்கு தூத்துக்குடி வந்தடையும். மறுமார்க்கமாக தூத்துக்குடியில் இருந்து வருகிற 18, 22 ஆகிய தேதிகளில் மதியம் 2 மணிக்கு புறப்பட்டு பெங்களூரு செல்லும் சிறப்பு ரெயில் (06298), மேற்கண்ட வழித்தட வழியாக மறுநாள் அதிகாலை 4.15 மணிக்கு பெங்களூரு சென்றடையும். இந்த சிறப்பு ரெயில்களுக்கான முன்பதிவு நேற்று காலை 8 மணிக்கு தொடங்க உள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தினபூமி

thinaboomi.com


பூமி: 26 சுற்று: 124 புரட்டாசி 28

Regd. No.TN/WR/SLM(E)/14/2017-2019 RNI Regn. No. TNTAM/2001/4003

சேலம், செவ்வாய், அக்டோபர் 14, 2025

▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ புதுச்சேரி

பக்கம் 8 ₹ 3.00

**பொருளாதாரத்திற்கான நோபல் பரிசு ஜோயல், அகியோன், ஹோவிட்டுக்கு அறிவிப்பு**

...2-ம் பக்கம்


**புதுச்சேரியில் உயர்மட்ட மேம்பாலத்திற்கு மத்திய அமைச்சர் கட்காரி அடிக்கல்**

...3-ம் பக்கம்

**டெல்லி 2-வது டெஸ்ட் போட்டி: இந்தியாவுக்கு 121 ரன்கள் இலக்கு நிர்ணயித்தது மே.இ.தீவுகள் அணி**

....6-ம் பக்கம்






● சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று முதல்வர் மு.க.ஸ்டாலினை பாக்ஸ்கான் நிறுவனத்தின் இந்தியாவிற்கான தலைவர் ராபர்ட் வூ சந்தித்து பேசினார். இதில் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தலைமைச்செயலாளர் நா. முருகானந்தம், செயலாளர் வி.அருண்ராய், இயக்குநர் தாரேஷ்அகமது, பாக்ஸ்கான் நிறுவனத்தின் இயக்குநர் செந்தில்குமார், நிர்வாக இயக்குநர் டேவிட் சென், இயக்குநர் தினகர் மல்லாடி, நிர்வாகிகள் ஹன்னா வாங், சுஜாய் ஆகியோர் உடனிருந்தனர்.

## எங்கள் நிறுவனருக்கு முதலாம் ஆண்டு அஞ்சலி

கடந்த வருடம் இதே நாளில் (அக்.14-ல்) கோவில்பட்டி அருகே நடந்த விபத்தில் உயிரிழந்த தினபூமி நாளிதழ் நிறுவனரும், தொழிலதிபருமான திரு.கே.ஏ.எஸ்.மணிமாறன் அவர்களுக்கு தினபூமி நாளிதழ் ஊழியர்கள் சார்பாக எங்களின் அஞ்சலியை காணிக்கையாக்குகிறோம். அவரது மறைவிற்கு தமிழக கவர்னர் ஆர்.என்.ரவி, முதல்வர் மு.க.ஸ்டாலின், அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி கே.பழனிசாமி உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் அப்பொழுது தங்களின் இரங்கலை தெரிவித்திருந்தனர்.

மறைந்த நிறுவனர் திரு.கே.ஏ.எஸ். மணிமாறன் அவர்கள் பத்திரிகை துறையில்



நிலவும் போட்டி சூழலை திறம்பட கையாண்டு அதில் முத்திரை பதித்தவர். அவர் எடுத்துக்கொண்ட முயற்சியால் ஜனநாயகத்தின் 4-ம் தூணான பத்திரிகை துறையாக விளங்கும் தினபூமி நாளிதழ் இன்றளவும் ஏற்றமிகு நாளிதழாக வெளிவந்து கொண்டிருக்கிறது. அதற்கு வித்திட்டவர் அவர் என்றால் அது மிகையாகாது.

அவரது ஆசியுடனும், மக்கள் நல்ஆதரவோடும் தினபூமி நாளிதழ் மக்களுக்கான சேவையை தொடர்ந்து செய்யும் என்பதை எண்ணி நாங்கள் பெருமை கொள்கிறோம்.

**- தினபூமி நாளிதழ்**

### பரபரப்பான அரசியல் சூழ்நிலையில்

# தமிழக சட்டசபை இன்று கூடுகிறது

## வரும் 17-ம் தேதி வரை 4 நாட்கள் நடைபெறும்

சென்னை, அக். 14-

**பரபரப்பான அரசியல் சூழ்நிலையில் தமிழக சட்டப்பேரவை கூட்டத்தொடர் இன்று (அக்டோபர் 14) முதல் அக்டோபர் 17ஆம் தேதி வரை 4 நாட்கள் நடைபெறும் என சபாநாயகர் அப்பாவு அறிவித்துள்ளார். நாளை கூடுதல் மானியக் கோரிக்கை முன் வைக்கப்படவுள்ளது.**

**ஆண்டின் முதல் கூட்டம்...**

தமிழக சட்டசபையின் இந்த ஆண்டின் முதல் கூட்டம் கடந்த ஜனவரி மாதம் 6-ம் தேதி கவர்னர் உரையுடன் தொடங்கியது. இந்த கூட்டம் 4 நாட்கள் நடைபெற்றது. அதைத்தொடர்ந்து மார்ச் 14-ம் தேதி சட்டசபையில் 2025-2026-ம் ஆண்டுக்கான பொது பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டது. மறுநாள் வேளாண் பட்ஜெட் தாக்கல் ஆனது. அதைத்தொடர்ந்து, மார்ச் 17-ம் தேதி முதல் 21-ம் தேதி வரை 2 பட்ஜெட்டுகள் மீதான பொது விவாதம் நடைபெற்றது.

**6 மாத காலத்தில்..**

மார்ச் 24-ம் தேதி முதல் ஏப்ரல் 29-ம் தேதிவரை துறை வாரியாக மானியக் கோரிக்கை மீதான விவாதங்கள் நடந்தன. பின்னர் தேதி குறிப்பிடாமல் சட்டசபை கூட்டம் தள்ளிவைக்கப்பட்டது. இந்த நிலையில் 6 மாத கால இடைவெளியில் சட்டசபை மீண்டும் கூட்டப்பட வேண்டும் என்ற அவை விதியின் அடிப்படையில், தமிழக சட்டசபை மீண்டும் இன்று கூடுகிறது. பரபரப்பான அரசியல் சூழலில் சட்டசபை இன்று கூடுகிறது.

**அலுவல் ஆய்வுக்குழு...**

இதற்கிடையே சென்னை தலைமைச் செயலகத்தில் நேற்று நடந்த அலுவல் ஆய்வுக் குழு கூட்டத்தை தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த சபாநாயகர் அப்பாவு, " இன்று (நேற்று) நடைபெற்ற அலுவல் ஆய்வு குழு கூட்டத்தின் முடிவின் படி இன்று முதல் அக்டோபர் 17-ம் தேதி வரை சட்டப்பேரவை கூட்டத்தொடர் நடைபெறும்.

**இரங்கல் குறிப்புகள்...**

இன்று காலை சட்டப்பேரவை கூடியவுடன் மறைந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் குறித்து இரங்கல் தீர்மானம் வாசிக்கப்படும். அதன் தொடர்ச்சியாக கரூரில் நடந்த துயரச் சம்பவம், கேரள முன்னாள் முதல்வர் வி.எஸ்.அச்சுதானந்தன், ஜார்க்கண்ட் முன்னாள் முதல்வர் சிபு சோரன், நாகாலாந்து மாநில ஆளுநர் இல.கணேசன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த பொதுச்செயலாளர் சுதாகர் ரெட்டி மற்றும் ஐஏஎஸ் அதிகாரி மருத்துவர் பீலா வெங்கடேசன் உள்ளிட்ட அனைவருக்கும் சட்டமன்றத்தில் இரங்கல் குறிப்புகள் வாசிக்கப்படும். அதைத் தொடர்ந்து எம்.எல்.ஏ. அமுல் கந்தசாமி மறைவு குறித்து இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு பேரவை நிகழ்ச்சிகள் ஒத்திவைக்கப்படும்.

**மானியக் கோரிக்கை...**

அக்டோபர் 15ம் தேதி கூடுதல் மானியக் கோரிக்கை முன் வைக்கப்படும். அதனை தொடர்ந்து மானியக் கோரிக்கைகள் மீதான விவாதம் நடைபெறும். அக்டோபர் 17ம் தேதி விவாதத்திற்கு முதல்வர் ஸ்டாலின் பதில் அளிப்பார்" இவ்வாறு சபாநாயகர் அப்பாவு கூறினார். இந்த சட்டசபை கூட்டத்தொடரில் காசா போர் நிறுத்தம் தொடர்பாக தீர்மானம் கொண்டு வரப்பட உள்ளது. சட்டசபை தேர்தல் நெருங்குவதால் இந்த கூட்டத்தில் காரசார விவாதத்திற்கு பஞ்சம் இருக்காது.

# மதுரவாயலில் 1,600 பேருக்கு புதிய வீட்டுமனை பட்டாக்கள்

## துணை முதல்வர் உதயநிதி வழங்கினார்

சென்னை, அக். 14-

**சென்னை, மதுரவாயில் பகுதியில் 1,600 பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்களை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்.**

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:- தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேற்று (13.10.2025) சென்னை காரம்பாக்கம் நவரத்தன்மல் ஜெயின் வளாகத்தில் நடைபெற்ற விழாவில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் சார்பில் 1,600 பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கினார்.

இவ்விழாவில் தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரை:- இன்றைக்கு (நேற்று) இந்த மதுரவாயில் பகுதிக்கு வருகை தந்து 1,600 பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குகின்ற இந்த விழாவில் உங்களையெல்லாம் சந்தித்ததில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன், பெருமையடைகின்றேன்.

உண்ண உணவு, உடுத்த உடை, இருக்க இடம் இது மூன்றும் தான் ஒவ்வொரு மனிதனுக்கு அடிப்படை தேவைகள். இதில் உடை, உணவு பெரும்பாலும் எல்லோருக்கும் கிடைத்திருக்கும் என்றே சொல்லலாம். ஆனால், குடியிருக்கின்ற இடம் பட்டாவுடன் வேண்டும் என்பது தான் இன்றைக்கு இருக்கும் மக்களுடைய மிகப்பெரிய பிரச்சனை, மிகப் பெரிய ஒரு சவாலாக இருந்து கொண்டிருக்கிறது.

குறிப்பாக வீட்டுக்கு பட்டா இல்லை என்றால், அதனால் ஏற்படுகின்ற வேதனையை பட்டியலிட முடியாது. மின் இணைப்பு வாங்க முடியாது. தண்ணீர் இணைப்பு அவ்வளவு ஈசியாக கிடைத்து விடாது. வங்கி கடன் கிடைப்பது கஷ்டம். எப்போது யார் வந்து இடத்தை காலி செய்ய சொல்வார்கள் என்ற பதட்டம்

(1-ம் பக்க தொடர்ச்சி)

### கரூர் கூட்ட நெரிசல் சம்பவ வழக்கு:

# சி.பி.ஐ. விசாரணைக்கு சுப்ரீம் கோர்ட் உத்தரவு

## ஓய்வுபெற்ற நீதிபதி தலைமையில் 3 பேர் குழு அமைப்பு

புதுடெல்லி, அக். 14-

**கரூர் கூட்ட நெரிசல் சம்பவ வழக்கை சி.பி.ஐ. விசாரணைக்கு மாற்றி சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்டுள்ளது. மேலும், விசாரணையை கண்காணிக்க ஓய்வுபெற்ற சுப்ரீம் கோர்ட் நீதிபதி அஜய் ரஸ்தோகி தலைமையில் 3 பேர் குழு அமைத்துள்ளது.**

கரூரில் தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் பிரசாரத்தின்போது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். இதுகுறித்து சென்னை ஐகோர்ட் உத்தரவுப்படி ஐ.ஜி. அஸ்ரா கார்க் தலைமையிலான சிறப்பு புலனாய்வு குழு விசாரணை நடத்தி வருகிறது. இந்த சிறப்பு புலனாய்வு குழு விசாரணைக்கு தமிழக வெற்றிக்கழகம் எதிர்ப்பு தெரிவித்துள்ளது. சென்னை ஐகோர்ட் தனி நீதிபதி, கரூர் சம்பவம் தொடர்பாக விசாரணை குழு அமைக்க பிறப்பிக்கப்பட்ட உத்தரவுக்கு எதிராக சுப்ரீம் கோர்ட்டில் தமிழக வெற்றிக் கழகம் சார்பில் மனுதாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனு மீதான விசாரணை சுப்ரீம் கோர்ட்டில் நடைபெற்றது. இந்த மனு, நீதிபதிகள் மகேஸ்வரி, அஞ்சாரியா ஆகியோர் கொண்ட அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது தமிழக போலீசை மட்டும் கொண்ட சிறப்பு புலனாய்வு குழு மீது எங்களுக்கு நம்பிக்கை இல்லை. எனவே ஓய்வு பெற்ற நீதிபதி தலைமையில் விசாரணை குழு அமைக்கப்பட வேண்டும் என்று த.வெ.க. தரப்பு வலியுறுத்தியது.

### சி.பி.ஐ. விசாரணை எதற்கு..?

நீதிபதிகள் தங்கள் தீர்ப்பில் சென்னை ஐகோர்ட்டின் செயல்பாடு மற்றும் 2 பேர் தாக்கல் செய்த மனுக்களின் அடிப்படையில் இந்த வழக்கில் சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிடுகிறோம். இந்த வழக்கில் நியாயமான விசாரணை தேவை என்பதால் சி.பி.ஐ. விசாரிக்க உத்தரவிடப்பட்டுள்ளது. சிறப்பு புலனாய்வு குழு விசாரணைக்கு தனி நீதிபதி பிறப்பித்த உத்தரவில் பல கேள்விகள் எழுவதால், நேர்மையான விசாரணைக்கு உத்தரவிட்டு இருக்கிறோம் என்று தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், இந்த வழக்கை நேற்று விசாரித்த சுப்ரீம் கோர்ட், கரூர் கூட்ட நெரிசல் வழக்கை சி.பி.ஐ. விசாரணைக்கு மாற்றி உத்தரவிட்டது. இது இடைக்கால உத்தரவு மட்டுமே என்று தெளிவுபடுத்திய சுப்ரீம் கோர்ட், சி.பி.ஐ. விசாரணையை கண்காணிக்க ஓய்வுபெற்ற சுப்ரீம் கோர்ட் நீதிபதி அஜய் ரஸ்தோகி தலைமையில் 3 பேர் குழு அமைக்கப்பட்டுள்ளது. விசாரணை குழுவில் 2 ஐபிஎஸ் அதிகாரிகள் இடம்பெறுவார்கள். எனினும் அவர்கள் தமிழ்நாட்டை பூர்வீகமாக கொண்டவர்களாக இருக்கக் கூடாது என்று சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்டுள்ளது.

முன்னதாக இந்த வழக்கில் சி.பி.ஐ. விசாரணை கோரி மோசடியாக மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று தமிழக அரசு தரப்பில் ஆஜரான வக்கீல்கள் முறையிட்டனர். அதாவது மனுதாரர்களுக்கு தெரியாமலேயே அவர்களது பெயரில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. உத்தரவு பிறப்பித்த 2 வழக்குகளில் மனுதாரர்கள் மனுவை தாக்கல் செய்யவே இல்லை. எனவே இதை சுப்ரீம் கோர்ட் கருத்தில் கொள்ள வேண்டும் என்று கூறினார்கள். இதையடுத்து நீதிபதிகள், "மனுதாக்கலில் மோசடி நடந்திருந்தால் அதையும் சி.பி.ஐ. விசாரிக்க உத்தரவிடுவோம் என்றனர். சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பானது தமிழக வெற்றிக்கழகத்துக்கு கிடைத்த வெற்றியாக பார்க்கப்படுகிறது.

### சிப்காட் தொழில் பூங்காக்களில் 16 புதிய குழந்தைகள் காப்பகங்கள்,

# ரூ.190 கோடியில் திண்டிவனம், தேனியில் மெகா உணவு பூங்கா

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்

சென்னை, அக். 14-

**சிப்காட் தொழில் பூங்காக்களில் 16 புதிய குழந்தைகள் காப்பகங்கள், ரூ.190 கோடி செலவில் திண்டிவனம், தேனியில் மெகா உணவு பூங்காக்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று திறந்து வைத்தார்.**

தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறையின் சார்பில் சிப்காட் தொழில் பூங்காக்களில் 16 புதிய குழந்தைகள் காப்பகங்கள், ரூ.120 கோடி செலவில் திண்டிவனம் மெகா உணவு பூங்கா, ரூ.70 கோடி செலவில் தேனி மெகா உணவு பூங்கா ஆகியவற்றை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று திறந்து வைத்தார்.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:- முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று (13.10.2025) தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறையின் சார்பில் தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) தொழில் பூங்காக்களில் அமைத்துள்ள 16 புதிய குழந்தைகள் காப்பகங்கள், 120 கோடி ரூபாய் செலவில் விழுப்புரம் மாவட்டத்தில் 157.91 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள திண்டிவனம் மெகா உணவு பூங்கா மற்றும் 70 கோடி ரூபாய் செலவில் தேனி மாவட்டத்தில் 123.49 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள தேனி மெகா உணவு பூங்கா ஆகியவற்றை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

**குழந்தைகள் காப்பகங்கள்:**

முதலீடுகளை ஈர்ப்பது, வேலைவாய்ப்புகளை உருவாக்குவது மட்டுமின்றி தொழிலாளர் நலன் பேணுவதிலும் தமிழ்நாடு அரசு தனிக் கவனம் செலுத்தி வருகிறது. இந்தியாவிலேயே அதிகமான செயல்பாட்டில் உள்ள தொழிற்சாலைகள் தமிழ்நாட்டில் உள்ளன. நாடு முழுவதிலும் உள்ள தொழிற்சாலைகளில் பணிபுரியும் மொத்த பெண்களில் 43 சதவிகித பங்களிப்பை கொண்டிருப்பது தமிழ்நாட்டின் தனிச் சிறப்பும் பெருமையும் ஆகும். எனவே, பெண் தொழிலாளர்களின் நலன் பேணும் விதமாக, மகளிர் தங்கும் விடுதிகள், பொது வசதிகள், திறன் மேம்பாட்டு வசதிகள், தாய்மார்கள் நலன் காக்கும் பொருட்டு அர்ப்பணிப்புடன் கூடிய குழந்தை காப்பக வசதிகளையும் சிப்காட் நிறுவனம் அமைத்து வருகின்றது.

அந்த வகையில், தேர்வாய்கண்டிகை, வல்லம் வடகால், சிறுசேரி, கும்மிடிப்பூண்டி, கடலூர், பர்கூர், பெருந்துறை, தூத்துக்குடி, நிலக்கோட்டை, ராணிப்பேட்டை, புதுக்கோட்டை,

(1-ம் பக்க தொடர்ச்சி)

### 11-ம் வகுப்பு பொதுத்தேர்வு ரத்து:

# தமிழ்நாடு அரசாணை வெளியீடு

சென்னை, அக். 14-

**11-ம் வகுப்பு பொதுத் தேர்வை ரத்து செய்து தமிழக அரசு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.**

தமிழ்நாடு அரசு பள்ளிக் கல்வித் துறைக்கான மாநிலக் கல்விக் கொள்கை-2025ஐ கடந்த ஆகஸ்ட் மாதம் 8-ம் தேதி வெளியிடப்பட்டது. அதில் தமிழகத்தில் இந்த கல்வியாண்டு முதல் பிளஸ்-1 மாணவர்களுக்கு பொதுத் தேர்வு ரத்து செய்யப்படுவதாக தெரிவிக்கப்பட்டது. மேலும் இருமொழிக் கொள்கையில் உறுதியாக இருப்பதாக முதல்வர் தெரிவித்தார்.

எஸ்.எஸ்.எல்.சி., பிளஸ்-2 வகுப்பு மாணவ-மாணவிகளுக்கு மட்டுமே இருந்து வந்த பொதுத் தேர்வை, பிளஸ்-1 வகுப்புக்கும் கடந்த 2017-18-ம் கல்வியாண்டில் கொண்டுவரப்பட்டது. பிளஸ்-1 வகுப்பு பாடங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், நேரடியாக பிளஸ்-2 வகுப்பு பாடங்களை தனியார் பள்ளிகள் நடத்துவதில் அதிக ஆர்வம் காட்டுவதை தவிர்ப்பதற்காகவும், பிளஸ்-1 வகுப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கவும் கொண்டு வரப்பட்டதாக அப்போது சொல்லப்பட்டது.

பிளஸ்-1 வகுப்புக்கும் பொதுத்தேர்வு என்றால், 3 ஆண்டுகள் தொடர்ந்து பொதுத்தேர்வு பயத்திலேயே மாணவர்கள் இருப்பார்களே என அப்போது பல தரப்பினரும் கருத்து தெரிவித்தனர். இந்தநிலையில் பிளஸ்-1 பொதுத்தேர்வு 8 ஆண்டுகளுக்கு பிறகு, பொதுத்தேர்வு

(1-ம் பக்க தொடர்ச்சி)

# சென்னை ராயபுரம் மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் ரூ.12.93 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் வளர்ச்சித்திட்டப்பணி

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேரில் ஆய்வு



**சென்னை,அக்.14**

இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமானபி.கே.சேகர்பாபு, வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், துறைமுகம் சட்டமன்றத் தொகுதி, இராயபுரம் மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் ரூ.12.93 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப் பணிகளை (13.10.2025) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் வார்டு-57க்குட்பட்ட வால்டாக்ஸ் சாலை, வ.உ.சி. தெருவில் ரூ.8.55 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் சமுதாயக் கூடக் கட்டுமானப் பணி மற்றும் சென்னை மேல்நிலைப்பள்ளியில் ரூ.1.41 கோடி மதிப்பீட்டில் தரைத்தளம் மற்றும் முதல் தளத்துடன் கட்டப்பட்டு வரும் கூடுதல் வகுப்பறைக் கட்டடப் பணி, வார்டு-54க்குட்பட்ட அம்மன் கோவில் தெரு, சென்னை நடுநிலைப் பள்ளியில் ரூ.2.97 கோடி மதிப்பீட்டில் தரைத்தளம் மற்றும் முதல் தளத்துடன் கட்டப்பட்டு வரும் கூடுதல் வகுப்பறைக் கட்டடப் பணி ஆகியவற்றைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இப்பணிகளை உரிய தொழில்நுட்ப வழிகாட்டுதலுடன் தரமாகவும், விரைவாகவும் முடித்து பயன்பாட்டிற்குக் கொண்டு வர அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.இதில் வடக்கு வட்டார துணை ஆணையர் கட்டா ரவி தேஜா, மண்டலக் குழுத் தலைவர் பி.ஸ்ரீராமுலு உடனிருந்தனர்.



சென்னை மாநகராட்சியின் சார்பில், மெரினா நீலக்கொடி கடற்கரைப்பகுதியில் நடைபெற்ற தமிழ்நாடு பாரம்பரிய கலை நிகழ்ச்சிகளை ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டு மகிழ்ந்தனர்.

# பார்க் மற்றும் கோவிலில் வெடிகுண்டு இருப்பதாக கூறி காவல் கட்டுப்பாட்டறைக்கு கைப்பேசியில் மிரட்டிய வாலிபர் கைது

**சென்னை அக்14-**

சென்னை நேற்று முன்தினம் காலை,காவல் கட்டுப்பாட்டறைக்கு ஒரு செல்போன் எண்ணிலிருந்து தொடர்பு கொண்ட நபர் ஒருவர் அவதூறாக பேசியும், மதுரவாயல் பல்லவன் நகர் பார்க்கிலும் அதன் அருகில் உள்ள கோவிலிலும் வெடிகுண்டு வைத்துள்ளதாக கூறி இணைப்பை துண்டித்துள்ளார். இது குறித்து உடனடியாக மதுரவாயல் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர், சென்னை காவல் பாதுகாப்பு பிரிவு வெடிகுண்டு கண்டுபிடிப்பு மற்றும் செயலிழத்தல் பிரிவு காவல் ஆய்வாளர் தலைமையிலான குழுவினர், காவல் மோப்ப நாய் பிரிவினருடன் ஒருங்கிணைந்து, மேற்கொள்ளப்பட்ட தீவிர சோதனையில் வெடிகுண்டு எதுவும் இல்லை புரளி எனத் தெரிய வந்தது. பின்னர் இது குறித்து மதுரவாயல் காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்து, மிரட்டல் விடுத்த செல்போன் எண்ணை வைத்து அதிநவீன தொழில்நுட்ப வசதிகள் மூலம் தீவிர விசாரணை மேற்கொண்டு, வெடிகுண்டு வைத்துள்ளதாக செல்போன் மூலம் காவல் கட்டுப்பாட்டறைக்கு மிரட்டல் விடுத்த பூபதி, என்பவரை காலை கைது செய்து விசாரணை செய்து, அவரிடமிருந்து குற்றச்செயலுக்கு பயன்படுத்திய 1 செல்போன் பறிமுதல் செய்யப்பட்டது.

மேலும் விசாரணையில் பூபதி சென்னையில் கூலி வேலை செய்து வருவதும், மதுபோதையில் வெடிகுண்டு வைத்திருப்பதாக காவல் கட்டுப்பாட்டாறைக்கு மிரட்டல் விடுத்து பேசியது தெரியவந்தது. விசாரணைக்குப்பின்னர் கைது செய்யப்பட்ட பூபதி நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.



மதுரவாயலில் சாய்தெரேசா பவுண்டேஷன் சார்பில் முன்னாள் குடியரசு தலைவர் ஏ.பி.ஜெ.அப்துல்கலாம் 94வது பிறந்தநாளை முன்னிட்டு மாமன்ற உறுப்பினர் வி.வி.கிரிதரன் பொதுமக்களுக்கு அன்னதானம் மற்றும் மரம் கன்று வழங்கினார். உடன் நிறுவனர் தலைவர் எம்.பி.ஞானமுத்து உள்ளார்.

# மாதவரம் மாத்தூர் பகுதியில் பாஜக தொழிற்சங்க விழா



**திருவொற்றியூர் அக்.14**

வடசென்னை மேற்கு மாவட்ட பாஜக மற்றும் மாத்தூர்ஏ.கே.ஆர். அறக்கட்டளை சார்பில்மாவட்ட பொதுச்செயலாளர் எம்.ஏ.குமரன் ஏற்பாட்டில் மாத்தூர் எம் எம் டி ஏ பகுதியில் உள்ள 2 தொழிலாளர் சங்கம் சார்பில் ஆயுத பூஜை விழா நடை பெற்றது. இந்த விழாவில் 40 ஆட்டோ தொழிலாளர்களுக்கு சீருடை 5 கிலோ அரிசி ரொக்கபணம் ரூ.500ஆகிய உதவிபொருட்களைஎம்.ஏ.குமரன் சார்பில் அமைப்பு சாரா ஆட்டோ ஓட்டுனர் சங்க மாநில தலைவர் ராதாகிருஷ்ணன் வழங்கினார்.

முன்னதாக சென்னை மேற்கு மாவட்ட தலைவர் அம்பத்தூர் பாஸ்கர் அனைவருக்கும் வாழ்த்து தெரிவித்திருந்தார்.எம் எம் டி ஏ ஆட்டோ ஓட்டுனர் சங்கம் சார்பில் 50 பெண்களுக்கு புடவைகள் வழங்கினார்கள். இந்த விழாவில் மாநில செயலாளர் சோமகாந்தன் மாவட்டத் தலைவர் பிச்சாண்டி மண்டல் நிர்வாகிகள் நந்தினிதீபன் எஸ்.சிவக்குமார் பிரஸ் செல்வம் பி.சுந்தரமூர்த்தி ராமகிருஷ்ணன் மகாதேவன் ரமேஷ் கணேஷ்வெங்கடேசன் அம்பிகா செல்வி வசந்தி பாக்கிய லட்சுமி ஆட்டோ சங்க தலைவர்கள் நடராஜன் சுரேஷ் குமார் உட்பட நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். முன்னதாக வட்ட தலைவர் கே. செல்வகுமார் வரவேற்றார் முடிவில் ஆட்டோ ஓட்டுநர் சங்க பொருளாளர் ஏ. சேகர் நன்றி கூறினார்.

# திருவொற்றியூரில் தந்தை,மகனுக்கு கத்தி குத்து: 2 பேர் கைது

**சென்னை அக் 14-**

சென்னை, திருவொற்றியூர், தாங்கல் பகுதியைச் சேர்ந்த பஷீர், என்பவர் ஆட்டோ ஓட்டி வருகிறார். பஷீர் அவரது மகன் அஸ்லாம் பாஷா, என்பவருடன் 11 ந் தேதி அன்று வீட்டினருகே தாங்கல், டி.எச். ரோட்டிலுள்ள ஒரு பேக்கரி அருகே நின்றிருந்த போது, பல்சர் இருசக்கர வாகனத்தில் வந்த 3 பேரும் வேகமாக வந்து பஷீர் மற்றும் அவரது மகன் அருகே இருசக்கர வாகனத்தை நிறுத்தியபோது, பஷீர் ஏன் இவ்வளவு வேகமாக வண்டியை ஓட்டுகிறாய் என கேட்டபோது, 3 பேரும் தகாத வார்த்தைகளால் பேசி கையால் தாக்கியும், இருவரையும் கத்தியால் தாக்கியும் கொலை மிரட்டல் விடுத்துச் சென்றனர். இரத்தக்காயமடைந்த இருவரும் ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்று வரும் நிலையில், மேற்படி சம்பவம் குறித்து பஷீர் கொடுத்த புகார் மீது திருவொற்றியூர் காவல் நிலையத்தில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

திருவொற்றியூர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட 1.ஷபீர், 2.பிரேம்குமார், ஆகிய 2 பேரை கைது செய்தனர். மேலும், இவ்வழக்கில் தொடர்புடைய இளஞ்சிறாரிடம் விசாரணை செய்தனர். அவர்களிடமிருந்து புகார்தாரரின் 1 கத்தி மற்றும் 1 பல்சர் இருசக்கர வாகனம் பறிமுதல் செய்யப்பட்டது.

விசாரணையில் கைது செய்யப்பட்ட எதிரி ஷபீர் மீது ஏற்கனவே 1 குற்ற வழக்கு உள்ளது தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட எதிரிகள் இருவரும் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர். இளஞ்சிறார், சிறார் நீதிக் குழுமத்தில் ஆஜர் செய்யப்பட்டு, அரசு கூர்நோக்கு இல்லத்தில் சேர்க்கப்பட்டார்.

# ஜன்னல் ஓரமாக சீட் தர மறுத்ததால் ஆம்னி பேருந்து ஊழியரை தாக்கிய வாலிபர் கைது

**சென்னை அக் 14-**

கோயம்பேடு ஆம்னி பேருந்து நிலையத்தில் இருந்து பெங்களூரு செல்லும் பேருந்தில் நேற்று முன்தினம் ஏறிய வாலிபர், டிக்கெட் எடுத்துவிட்டு, 'ஜன்னல் ஓரமாக சீட் வேண்டும்' என்று நடத்துனரிடம் கேட்டுள்ளார். அதற்கு அவர், ஜன்னல் ஒரமாக சீட் ஏதும் காலியாக இல்லை, என்று கூறியுள்ளார். இதனால், அவர்களுக்குள் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. அப்போது, டிராவல்ஸ் நிறுவன ஊழியர் பாட்ஷா (41) அங்கு வந்து, தகராறு செய்த பயணியை சமாதானம் செய்துள்ளார்.அப்போது, ஆத்திரமடைந்த பயணி, பாட்ஷாவை சரமாரியாக தாக்கி, பேருந்தில் இருந்து கீழே தள்ளியுள்ளார். இதில் பாட்ஷாவின் இடுப்பு எலும்பு முறிந்து, வலியால் துடித்தார். அவரை மீட்டு கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். புகாரின் பேரில், கோயம்பேடு போலீசார், அந்த பயணியை பிடித்து விசாரித்த போது, கோயம்பேடு பகுதியை சேர்ந்த ராஜேஷ் (39) என்பது தெரியவந்தது அவரை கைது செய்தனர்.

# லாரி டிரைவரிடம் பணம் மற்றும் செல்போனை பறித்த மூவர் கைது

**சென்னை அக்14-**

சென்னை, பழைய பல்லாவரம், ரங்கசாமி தெருவில் வசித்து வரும் மதுசூதனன், என்பவர் கழிவு நீர் லாரி ஓட்டி வருகிறார். இவர் மூவரசம்பேட்டை, சுப்பிரமணிய நகர் 3வது தெருவில் அவரது இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது, அங்கு லிப்ட் கேட்பது போல ஒருவர் இருசக்கர வாகனத் வழிமறிக்கவே, மதுசூதனன் வாகனத்தை நிறுத்தி, எங்கு செல்ல வேண்டும் என்று கேட்டபோது, அந்த நபர் மற்றும் சற்று தொலைவில் நின்றிருந்த 2 பேர் சேர்ந்து மதுசூதனை பணம் கேட்டு தகாத வார்த்தைகள் பேசி, அவரை கையாலும், கத்தியாலும் தாக்கி, சட்டைப்பையில் வைத்திருந்த பணம் ரூ.1,200/- மற்றும் செல்போனை பறித்துக் கொண்டு, மூவரும் அவர்களது டியோ இருசக்கர வாகனத்தில் தப்பிச் சென்றனர். இத்தாக்குதலில் இரத்த காயமடைந்த மதுசூதனன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற பின்னர், மேற்படி சம்பவம் குறித்து, மடிப்பாக்கம் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர். மடிப்பாக்கம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட எதிரிகள் 1.அருண், 2.சக்திவேல் (எ) சக்தி, 3.சரண்பாபு, ஆகிய 3 நபர்களை கைது செய்தனர். அவர்களிடமிருந்து புகார்தாரரின் சாம்சங் செல்போன் மீட்கப்பட்டு, குற்ற சம்பவத்திற்கு பயன்படுத்திய 3 கத்திகள் மற்றும் 1 டியோ இருசக்கர வாகனம் பறிமுதல் செய்யப்பட்டது.

விசாரணையில் கைது செய்யப்பட்ட எதிரி சரண் பாபு என்பவர் மடிப்பாக்கம் காவல் நிலைய சரித்திர பதிவேடு குற்றவாளி என்பதும், இவர் மீது ஏற்கனவே கொலைமுயற்சி, கஞ்சா, திருட்டு என 3 குற்ற வழக்குகளும், எதிரி அருண் மீது வழிப்பறி, கஞ்சா, அடிதடி உட்பட 9 குற்ற வழக்குகளும், எதிரி சக்திவேல் (எ) சக்தி மீது திருட்டு, அடிதடி உட்பட 5 குற்ற வழக்குகளும் உள்ளது தெரியவந்தது.கைது செய்யப்பட்ட எதிரிகள் மூவரும் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர்.

# பள்ளி சமையலறையில் பொருட்களை திருடிய இருவர் கைது

**சென்னை அக் 14-**

சென்னை, இராயப்பேட்டை, பேகம் தெருவில் உள்ள சென்னை நடுநிலை பள்ளியில் மஹ்பூர் ரஹ்மானி, என்பவர் தலைமை ஆசிரியராக பணிபுரிந்து வருகிறார். மேற்படி பள்ளி காலாண்டு விடுமுறை முடித்து கடந்த 06.ந் தேதி அன்று காலை பள்ளியை திறந்து பார்த்தபோது சமையல் அறையின் பூட்டு உடைக்கப்பட்டு, சமையல்கூடத்தில் இருந்த 1 மிக்ஸி, 1 கிரைண்டர், 3 அலுமினிய டபராக்கள், 2 தராசுகள் மற்றும் 4 எடைகற்கள் திருடு போனது தெரியவந்தது.

இது குறித்து தலைமை ஆசிரியை மஹ்பூர் ரஹ்மானி ஐஸ்ஹவுஸ் காவல் நிலைய குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.ஐஸ்அவுஸ் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர், தீவிர விசாரணை செய்தும், கண்காணிப்பு கேமரா பதிவுகளை ஆய்வு செய்தும் மேற்படி திருட்டில் ஈடுபட்ட 1.விக்கி (எ) விக்னேஷ், 2.வசந்த்(எ)வசந்தகுமார், ஆகிய இருவரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து மேற்படி பள்ளியில் திருடிய 1 மிக்ஸி, 1 கிரைண்டர், 3 அலுமினிய டபராக்கள், 2 தராசுகள் மற்றும் 4 எடைக்கற்கள் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டது.

# பாலாற்றில் புதிய ஆழ்துளை கிணறு அமைக்க உமையாள்புரம் கிராம மக்கள் கோரிக்கை

**காஞ்சிபுரம், அக். 14 --**

காஞ்சிபுரம் அடுத்த உமையாள்புரம் ஊராட்சி கிராம சபை கூட்டத்தில், பாலாற்றில் கூடுதலாக ஆழ்துளை கிணறு அமைத்து, பாதுகாப்பான குடிநீர் வழங்க வேண்டும் என, கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்னர்.

காஞ்சிபுரம் அடுத்த வெம்பாக்கம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்டது உமையாள்புரம் ஊராட்சி. இங்கு சிறப்பு கிராம சபை கூட்டம் ஊராட்சி செயலர் ஆயப்பன் தலைமையில் நடந்தது பற்றாளராக அங்கன்வாடி அமைப்பாளர் மஞ்சுளா கலந்து கொண்டார். கூட்டத்தில் கிராம மக்கள் பேசியதாவது: '



எங்களது ஊராட்சிக்கு அருகாமையில் தான் பாலாறு ஓடுகிறது. இந்த ஆற்றில் இருந்து தான் எங்களுக்கு குடிநீர் வழங்கப் பட்டு வருகிறது. இந்த குடிநீர் எங்களுக்கு போதுமானதாக இல்லை. எனவே, பாலாற்றில் கூடுதலாக ஆதுளை கிணறு அமைத்து எங்களுக்கு பாதுகாப்பான குடிநீர் வழங்க வேண்டும். எங்கள் ஊராட்சியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மின் மாற்றிலிருந்து, தெரு விளக்குக்கான இணைப்பை வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை மல்லிகாபுரம் மக்கள் முன் வைத்தனர்.

இந்த கோரிக்கைகளை அதிகாரிகளிடம் தெரிவித்து உரிய நடவடிக்கை எடுப்பதாக ஊராட்சி செயலர் ஆயப்பன் உறுதியளித்தார். இதை அடுத்து கிராம சபை கூட்டத்தில் கொண்டுவரப்பட்ட தீர்மானங்கள் வாசிக்கப்பட்டது. மக்கள் நலப் பணியாளர் சந்தானம், மகளிர் சுய உதவி குழு பொறுப்பாளர்கள்கலந்துக் கொண்டனர்.

# சென்னை மாநகராட்சி சார்பில் உலக வீடற்றோர் தின விழிப்புணர்வு கலை நிகழ்ச்சி

**சென்னை அக் 14-**

உலக வீடற்றோர் தினத்தையொட்டி சென்னை மாநகராட்சி- அரசு காப்பகங்களில் உள்ள நலன்கள் குறித்த விழிப்புணர்வு கலை நிகழ்ச்சி நடந்தது.சென்னை மாநகராட்சி, வடக்கு மண்டலம் சார்பில் உலக வீடற்றோர் தின விழிப்புணர்வு நிகழ்ச்சி மாதவரம் மண்டலம், ஆந்திரா பேருந்து நிலையத்தில் நடந்தது.

**கலைநிகழ்ச்சி**

மண்டல நல அலுவலர் தேவிகலா தலைமை வகித்தார். சுகாதார அலுவலர் பெரிய கருப்பன் முன்னிலை வகித்தார். இதில் ரியல் அறக்கட்டளையை சேர்ந்த இளைஞர் மற்றும் இளம் பெண்கள் வீடற்றோர் நிலை குறித்தும், அரசு மற்றும் சென்னை மாநகராட்சி நடத்தி வரும் காப்பகங்களில் வழங்கப்படும் சேவைகள், மறுவாழ்வு பணிகள், மீண்டும் குடும்பத்தாரோடு இணைப்பு, வேலைவாய்ப்பு திட்டங்கள், சமூகத் திட்டங்களோடு இணைத்தல் போன்ற பணிகள் குறித்து வீதி நாடகம், பொம்மலாட்டம், விழிப்புணர்வு பாடல்கள், விழிப்புணர்வு நடனத்தின் மூலம் எடுத்துரைத்தனர். தொடர்ந்து பயணிகள், ஓட்டுநர் நடத்துநர்கள், பொதுமக்கள் ஆகியோர் விழிப்புணர்வு பதாகைகளை ஏந்தி வீடற்றோரை வீதியில் விடமாட்டோம், காப்பகம் மூலம் மறுவாழ்வு தருவோம் என்று உறுதிமொழி எடுத்தனர்.

இந்நிகழ்ச்சியில், வடக்கு மண்டல காப்பக ஒருங்கிணைப்பாளர் மெர்லின் மற்றும் அறக்கட்டளை இயக்குநர் லாரன்ஸ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# தீபாவளி பண்டிகையை முன்னிட்டு சென்னை தியாகராயநகர் பகுதியில் கூடுதல் போலீஸ் கமிஷ்னர் கண்ணன் ஆய்வு

**சென்னை அக் 14-**

சென்னை பெருநகர காவல் ஆணையர் ஆ.அருண் உத்தரவின்பேரில், தியாகராய நகர் பகுதியில் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு செய்யப்பட்டுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகளை கூடுதல் காவல் ஆணையர் என்.கண்ணன் ஆய்வு செய்தும், சிசிடிவி கண்காணிப்பு மையம், காவல் உதவி மையம், புதுப்பிக்கப்பட்ட காவல் சிறார் மன்ற கட்டிடம் மற்றும் உடற்பயிற்சி கூடம் திறந்து வைக்கப்பட்டது.இதன் தொடர்ச்சியாக வருகிற 20.10.2025 அன்று கொண்டாடப்படும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு, பொதுமக்கள் புத்தாடைகள் மற்றும் பொருட்கள் வாங்குவதற்கு அதிகளவு கூடுமிடங்களான தி.நகர், பாண்டி பஜார், மயிலாப்பூர், பூக்கடை, புரசைவாக்கம், வண்ணாரப்பேட்டை ஆகிய இடங்களில் சென்னை பெருநகர காவல் துறை சார்பில், பல்வேறு விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

சென்னைகாவல் ஆணையாளர் திரு.ஆ.அருண், உத்தரவின்பேரில், சென்னை பெருநகர காவல் கூடுதல் ஆணையர் (தெற்கு) என்.கண்ணன், தி.நகர் ரங்கநாதன் தெருவில் அமைக்கப்பட்டுள்ள சிசிடிவி கேமராக்கள் கண்காணிப்பு மையம், ரங்கநாதன் தெரு மற்றும் உஸ்மான் ரோடு சந்திப்பு பாலத்தின் கீழ் புதிதாக அமைக்கப்பட்ட புதிய காவல் உதவி மையத்தை திறந்து வைத்து பாதுகாப்பு ஏற்பாடுகளை ஆய்வு செய்தார்.

**தீபாவளி பண்டிகைக்காக தி.நகர் பகுதியில் மேற்கொண்டுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள்**

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு, பொதுமக்கள் புத்தாடைகள் மற்றும் பொருட்கள் வாங்குவதற்கு தி.நகர் மற்றும் பாண்டி பஜார் பகுதிக்கு அதிகளவு வருவதால், அங்கு 8 தற்காலிக கண்காணிப்பு கோபுரங்கள், 4 காவல் உதவி மையங்கள், 2 தற்காலிக காவல் உதவி கட்டுப்பாட்டறைகள் மற்றும் இதர இடங்களில் 16 ஒலிப்பெருக்கிகள், 90 கூடுதல் கண்காணிப்பு கேமராக்கள், 3 டிரோன் கேமராக்கள் பொருத்தப்பட்டு, நடப்பு நிகழ்வுகளை கண்காணித்து, குற்றங்கள் நிகழாமல் தொடர் கண்காணிப்பில் ஈடுபட்டும்,



திருட்டு, குற்றங்கள் தொடர்பான காவல்துறை எச்சரிக்கைகள் ஒலிபரப்பப்பட்டும், கூட்டத்தில் குழந்தைகள் காணாமல் போனால் உடனடியாக மீட்பதற்கு குழந்தைகளின் கையில் பெற்றோர் விவரங்கள் எழுதுவதற்கான வழங்கப்பட்டும் தீவிர பாதுகாப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தி.நகர் பகுதியில் பொதுமக்கள் பாதுகாப்பிற்காக 200 காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்கள் , 100 ஆயுதப்படை ஆளிநர்கள், 100 ஊர்காவல் படையினர் கடந்த 01.10.2025 ம் தேதி முதல் சுழற்சி முறையில் நியமிக்கப்பட்டு பொதுமக்களுக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டு வருகிறது. மேலும் பொதுமக்கள் அவசர உதவிக்கு தொடர்பு கொள்ள 2 (89399 77649, 91504 72278) கைப்பேசி எண்கள் வழங்கப்பட்டுள்ளது. அவசர தேவைக்கு 2 ஆம்புலன்ஸ்கள், 2 தீயணைப்பு வாகனங்களும் நிறுத்தப்பட்டுள்ளது.

சென்னை பெருநகர காவல்துறையின் டிரோன் யூனிட் குழுவினர், டிரோன் கேமராக்கள் மூலம் கூட்டங்களை கண்காணித்து, குற்ற சம்பவங்கள் நிகழாமல் கண்காணித்து வருகின்றனர்.மேலும், சாதாரண உடையில் ஆண் மற்றும் பெண் காவலர்கள் பல குழுக்களாக ரோந்து சுற்றி வரப்பட்டு, கண்காணிப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். மேலும் காவல் கூடுதல் ஆணையர் கண்ணன் மாம்பலம் காவல் நிலைய வளாகத்தில் புதுப்பிக்கப்பட்ட உள்விளையாட்டு உபகரணங்களுடன் கூடிய காவல் சிறார் மன்ற கட்டிடம் மற்றும் நவீன உடற்பயிற்சி உபகரணங்களுடன் கூடிய உடற்பயிற்சி கூடங்களை திறந்து வைத்து பார்வையிட்டார்.நடைபெற்ற நிகழ்ச்சியில், இணை ஆணையர் பி.சிகல்யாண், துணை ஆணையர் எஸ்.குத்தாலிங்கம்,தி.நகர் காவல் சரக உதவி ஆணையர், மாம்பலம் காவல்நிலைய ஆய்வாளர், காவல் அதிகாரிகள் மற்றும் போலிசார் கலந்து கொண்டனர்.

# கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 6 வழித்தடங்களில் மகளிர் விடியல் பயண பேருந்து சேவை

## கலெக்டர், எம்.எல்.ஏ. துவக்கி வைத்தனர்



**கிருஷ்ணகிரி,அக்.14-**

கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையத்தில், 6 வழித்தடங்களில் வழித்தட நீட்டிப்பு ஃ மாற்றியமைக் கப்பட்ட மகளிர் விடியல் பயண பேருந்து சேவை களை கலெக்டர் ச.தினேஷ் குமார் , பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் தே.மதியழகன் ஆகியோர் (13.10.2025) கொடி யசைத்து துவக்கி வைத்தனர். தொடர்ந்து, பர்கூர் வட்டம், அஞ்சூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்திற்குட்பட்ட கொல்ரூர் பகுதிநேர நியாய விலைக் கடையை திறந்து வைத்தனர். கலெக்டர் ச.தி னேஷ் குமார் தெரிவித்தது வது:

தமிழ்நாடு முதலமைச் சர் தலைமையிலான அரசு பொறுப் பேற்றதிலிருந்து கடந்த நான்கு ஆண்டுகளில், தமிழ்நாடு அரசு போக்குவ ரத்துக் கழகம் (சேலம்) வரை., தருமபுரி மண்டலத்திற்குட் பட்ட கிருஷ்ணகிரி மாவட் டத்தில் 3 புதிய புறநகர் மற் றும் 5 நகர வழித்தடங்கள் என மொத்தம் 8 புதிய வழித் தடங்களும் மற்றும் 101 வழித்தட நீட்டிப்பு ஃ வழித் தட மாற்றம் என மொத்தம் 109 வழித்தடங்களில் 121 பேருந்துகள் மூலம் 280 கிராம ஃ நகரங்களில் இருந்து பள்ளி, கல்லூரி மாணவ ஃ மாணவர்கள் மற் றும் பொதுமக்கள் என சுமார் 4,77,594 பேர் பேருந்து வசதி பெற்று பயனடைந்து வருகி றார்கள்.

மேலும், பழைய புறநகர் பேருந்துகளுக்குப் பதிலாக 55 புதிய பேருந்துகள், 39 புன ரமைப்புப் பேருந்துகள் என மொத்தம் 94 பேருந்துகள் புதிய பொலிவுடனும், மக ளிர் விடியல் பயணம் செய் யும் பழைய நகரப் பேருந்து களுக்குப் பதிலாக 52 புதிய பேருந்துகள், 15 புனரமைப் புப் பேருந்துகள் என மொத் தம் 67 பேருந்துகள் புதிய பொலிவுடன் பள்ளி, கல் லூரி மாணவ ஃ மாணவிகள் மற்றும் பொதுமக்கள் பயன் பாட்டிற்கு இயக்கப்பட்டு வருகிறது.

தொடர்ந்து, (13.10.2025) கிருஷ்ணகிரி முதல் மேல் நூக்கி செல்லும் பேருந் தினை இட்டிக்கல் அகரம் உள்சென்று வருமாறும், திருப்பத்தூர் முதல் மத்தூர் செல்லும் பேருந்தினை கூடு தலாக ஒரு நடை திருப்பத் தூர் முதல் மத்தூர் வரை சென்று திரும்புமாறும், கிருஷ்ணகிரி முதல் ஐகுந்தம் செல்லும் பேருந்தினை அன கோடி வரை நீட்டித்தும், கிருஷ்ணகிரி முதல் குருபரப் பள்ளி செல்லும் பேருந் தினை எண்ணெகொல் புதூர் வரை நீட்டித்தும், மூங்கில் பட்டி முதல் கிருஷ்ணகிரி செல்லும் பேருந்தினை மோரமடுகு உள்சென்று வரு மாறும், கிருஷ்ணகிரி முதல் கருத்தமாரம்பட்டி செல்லும் பேருந்தினை முசுP டேம் பள்ளி உள்சென்று வருதல் என மொத்தம் 6 வழித்தடங் களில் வழித்தடநீட்டிப்பு ஃ மாற்றியமைக்கப்பட்ட மக ளிர் விடியல் பயணம் செய் யும் பேருந்து சேவை துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இத னால் 7 கிராமங்களில் உள்ள பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் என சுமார் 10,581 பேர் பேருந்து வசதி பெற்று பயனடைவார் கள்.

அதேப்போல், பொதுமக் கள் நீண்டதூரம் சென்று நியாயவிலைப் பொருட்கள் வாங்குவதை தவிர்க்கும் பொருட்டு, வசிக்கும் பகு திக்கு அருகிலேயே பெற்றுக் கொள்ள ஏதுவாக புதிய நியாய விலைக் கடைகள், பகுதிநேர மற்றும் முழுநேர நியாயவிலைக் கடைகள் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. அதனடிப்படை யில் அஞ்சூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க கட்டுப்பாட்டில் உள்ள நாய்கனூர் தாய்கடை யிலிருந்து, கொல்ரூர் பகுதி நேர நியாய விலை கடை திறக்கப்பட்டுள்ளது. இத னால் 156 குடும்ப அட்டைதா ரர்கள் தங்கள் பகுதிகளி லேயே குடிமைப் பொருள் கள் பெற்று பயனடைவார் கள் என கலெக்டர் ச.தினேஷ் குமார் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், தமிழ் நாடு அரசு போக்குவரத்து கழக மண்டல பொது மேலா ளர் செல்வம், மாவட்ட வழங்கல் அலுவலர் கீதாரா ணி, நகரமன்ற தலைவர் பரிதா நவாப், துணைத்தலை வர் சாவித்ரி, வட்டாட்சியர் கள் ரமேஷ், சின்னசாமி, கூட் டுறவு சரக பதிவாளர் ஆதீஸ் வரி, அரசு போக்குவரத்து கழக மண்டல துணை மேலா ளர்கள், நகரமன்ற உறுப்பி னர்கள் வேலுமணி, யாஸ் மின் அஸ்லாம், சீனிவாசன், மதன்ராஜ், உள்ளாட்சி பிரதி நிதிகள், அரசு அலுவலர்கள் மற்றும் தொழிற்சங்கப் பிரதி நிதிகள் கலந்து கொண்டனர்.

# தருமபுரி மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை முன்னிட்டு மீட்பு நடவடிக்கைகள் குறித்த ஒத்திகை நிகழ்ச்சி

## கலெக்டர் ரெ.சதீஸ் தலைமையில் நடைபெற்றது



**தருமபுரி,அக்.14-**

தருமபுரி மாவட்டம், புதிய மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில் மாவட்ட தீயணைப்பு மற் றும் மீட்பு பணிகள் துறை சார்பில் வடகிழக்கு பருவ மழை முன்னிட்டு, மழை வெள்ள காலங்களில் மேற் கொள்ள வேண்டிய மீட்பு நடவடிக்கைகள் குறித்த போலி ஒத்திகை நிகழ்ச்சி கலெக்டர் ரெ.சதீஸ், தலை மையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் கலெக் டர் ரெ.சதீஸ், தெரிவித்தா வது:-தமிழ்நாடு முதலமைச் சர் அவர்களின் அறிவுரை யின்படி, தருமபுரி மாவட் டத்தில் வடகிழக்கு பருவ மழை முன்னேற்பாடு பணி கள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வடகிழக்கு பருவ மழையின்போது, எவ்வித அசம்பாவிதங்களும், உயிரி ழப்புகளும் ஏற்படாமல் தடுக்க, பாதுகாப்பு முன் னெச்சரிக்கை நடவடிக்கை யாக, மீட்பு பணிகள் செய்து, பொதுமக்களை காப்பாற்று தல் தொடர்பாக போலி ஒத் திகை நிகழ்ச்சி புதிய மாவட்ட கலெக்டர் அலுவ லக வளாகத்தில் தீய ணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறையின் சார்பில் நடைபெற்றது.

இதில் தீயணைப்பு துறையில் உள்ள நவீன உப கரணங்களான ரோப்லான்ஞ் சர், மோட்டார் போட், லைப் பாய், லைப்ஜாக் கெட், ரெஸ்கியு டியுப், ரெஸ் கியு துரோபேக், அஸ்கா லைட் ஹைடிராலிக் கட்டர், பவர் ஷா மற்றும் மாவட்ட கலெக்டர் அவர்களின் சமூக பொறுப்புணர்வு (CSR) நிதி யில் இருந்து வழங்கப்பட்ட ஸ்கூபா டைவிங், விலங்கு களை மீட்கும் நவீன மீட்பு வலை முதலானவை மிக அழகாக காட்சிபடுத்தப் பட்டு இருந்தன.இப்பயிற்சி யில், ஏணி மூலம் மீட்பது, மோட்டார் படகு மூலம் மீட்பது, லைப்ஜாக்கெட் உத வியுடன் மீட்பது, வெள்ளத் தில் சிக்கிய விலங்குகளை நவீன மீட்புவலை பயன்ப டுத்தி மீட்பது, ரெஸ்கியு டியூப் (Rescue Tube), ரெஸ்கியு துரோபேக் (Rescue Throw Ba g) பயன்படுத்தி மீட்பது குறித்தும், அக்கரையில் சிக் கியவர்களை ரோப்லான்ஞ் சர் பயன்படுத்தி எவ்வாறு மீட்பது குறித்தும், வெள்ளத் தில் மூழ்கியவர்களை ஸ் கூபா உதவியுடன் எவ்வாறு மீட்பது குறித்தும் மற்றும் மீட்கப்பட்டவர்களுக்கு எவ் வாறு முதலுதவி சிகிச்சை அளிப்பது குறித்தும் பல் வேறு மீட்பு நடவடிக்கை களை மிக தத்ரூபமாக மாவட்ட தீயணைப்பு துறை அலுவலர்கள் பொதுமக்க ளுக்கு செய்து காட்டினர். இ தனை தொடர்ந்து, தீய ணைப்புத் துறையில் உள்ள செயற்கருவிகள் மற்றும் சிறப்பு உபகரணங்களை ஆய்வு செய்து தீயணைப்பு துறை அலுவலர் மற்றும் பணியாளர்களுக்கு கலெக் டர் ரெ.சதீஸ், அறிவுரை வழங்கினார். இந் நி கழ்ச்சியில், மாவட்ட தீய ணைப்பு அலுவலர் செல்வி ப.அம்பிகா, தொடர்புடைய அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
17-A/2, Meyyanur Road,
Salem - 636 004.
Ph: 0427- 2334165
E-Mail: salemedi@thinaboomi.com
RNI.Regn No.TNTAM/2001/4003
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

# சேலம் மாவட்டத்தில் தமிழக அரசின் சாதனைகள் விளக்க சிறு புகைப்படக்கண்காட்சி

## ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டனர்



**சேலம்,அக்.14-**

சேலம் மாவட்டம், அயோத்தியாப்பட்டணம் ஊராட்சி ஒன்றியம், பள்ளிப் பட்டி ஊராட்சி மன்ற திட லில் செய்தி மக்கள் தொடர்பு துறையின் சார்பில் (13.10.2025) அமைக்கப்பட்டிருந்த தமிழ் நாடு அரசின் திட்டங்கள் மற் றும் சாதனைகள் விளக்க சிறு புகைப் படக் கண் காட் சி யினை பொதுமக்கள் பார் வையிட்டனர். தமிழ் நாடு முதலமைச்சர் தமிழ் நாடு மக்களின் நலனுக்காக எண்ணற்றத் திட்டங்களை அறிவித்துச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகின்றார் கள். தமிழ்நாடு அரசின் திட் டங்கள் மற்றும் சாதனைக ளைப் பொதுமக்கள் பார்த் துப் பயன்பெறும் வகையில், செய்திமக்கள் தொடர்புத்து றையின் சார்பில் தமிழ்நாடு அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் விளக்கப் புகைப்படக்கண்காட்சி நடத் தப்பட்டு வருகின்றன. அந்த வகையில், (13.10.2025) அயோத்தியாப்பட்டணம் ஊராட்சி ஒன்றியம், பள்ளிப் பட்டி ஊராட்சி மன்ற திட லில் சேலம் மாவட்ட செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் தமிழ்நாடு அரசின் திட்டங்கள் மற்றும் சாதனை கள் விளக்க சிறுபுகைப்படக் கண்காட்சி நடத்தப்பட்டது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பல்வேறு துறை களின் சார்பில் வழங்கப் பட்ட அரசு நலத்திட்ட உத விகள், சுற்றுலாத்துறை அமைச்சர் , பல்வேறு துறை சார்ந்த அமைச்சர் பெருமக் கள் கலந்து கொண்ட நிகழ்ச் சிகளின் புகைப்படங்கள், கலெக்டர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், முக்கியப் பிரமுகர்கள் கலந்து கொண்ட நிகழ்ச்சிக ளின் புகைப்படங்கள் போன்ற எண்ணற்ற நலத் திட்ட உதவிகள் உள்ளிட்ட பல்வேறு புகைப்படங்கள் பொதுமக்களின் பார்வைக் காக வைக்கப்பட்டிருந்தன. இக்கண்காட்சியினை ஏராள மான பொதுமக்கள் பார்வை யிட்டு பயன்பெற்றனர்.

# நாமக்கல் மாவட்ட அரசு பள்ளி மாணவர்களுக்கான கல்லூரி களப்பயணம்

## கலெக்டர் துர்காமூர்த்தி தொடங்கி வைத்தார்



**நாமக்கல்,அக்.14-**

நாமக்கல் மாவட்ட ஆட் சிரயர் அலுவலக வளாகத் தில் (13.10.2025) கலெக்டர் துர் காமூர்த்தி, , பள்ளிக்கல்வித்து றையின் சார்பில் உயர்கல்வி வழிகாட்டி திட்டத்தின் கீழ் அரசு பள்ளி மாணவர்களுக் கான கல்லூரி களப்பயணம் -2025-னை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

நாமக்கல் மாவட்டத்தில் உயர்கல்வி வழிகாட்டி திட் டத்தின் கீழ் 2025 - 2026 ஆம் கல்வியாண்டில் அரசு மேல் நிலைப் பள்ளியில் 12-ம் வகுப்பு பயிலும் மாணவர்க ளுக்கு உயர்கல்வியில் ஆர்வ மூட்டும் விதமாக கல்லூரி களப்பயணச் செயல்பாடுள் இன்றைய தினம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. அதன் படி, 88 அரசு பள்ளிகளிலி ருந்து 4,642 மாணவர்கள் மருத்துவக் கல்லூரி, கால் நடை மருத்துவ கல்லூரி, கலை & அறிவியல் கல்லூரி, சட்டக் கல்லூரி, துணை செவிலியர் பயிற்சி பள்ளி மற்றும் கல்வியியல் கல்லூரி போன்ற 20 கல்லூரிகளுக்கு களப்பயணத்திற்கு அழைத்து செல்லப்படுகின்றனர்.

மாணவர்கள் தங் கள் களப்பயணத்தின் போது கல்லூரியின் வகுப்பறைகள், விளையாட்டு மைதானங் கள், ஆய்வகங்கள், நூலகம், விடுதி அறைகள் மற்றும் உணவு கூடம் ஆகியவற்றை பார்வையிட்டனர். இக்களப் பயணத்தின் மூலம் மாணவர் கள் கல்லூரியில் விண்ணப் பிக்கும் வழிமுறைகள், கல் லூரியில் உள்ள இளங்கலை படிப்புகள், உதவித் தொகை திட்டங்கள், போட்டித் தேர் வுகள், வேலை வாய்ப்புகள், கல்லூரியில் நடைபெறும் கல்விசாரா நிகழ்வுகள், கலாச் சார கொண்டாட்டங்கள், விளையாட்டு வசதிகள், கருத்தரங்குகள், பயிற்சி வகுப்புகள், சான்றிதழ் படிப் புகள், கூடுதல் பட்டப்படிப் புகள் மற்றும் ஆராய்ச்சி படிப்புகள் போன்றவற்றை அறிந்து கொள்ள ஏதுவாக அமைந்துள்ளது. மேலும் உயர்கல்வியில் சேர்ந்து பயில மாணவர்களை ஊக்கு விக்கவும், கல்லூரிகள் குறித்து மாணவர்களுக்கு உள்ள பயத்தை நீக்குவதற் கும், தங்களுடைய எதிர்கா லத்தை சிறப்பாக அமைத் துக்கொள்ள தேவையான வழிகாட்டுதலை பெறவும் இக்களப்பயணம் உதவியாக அமையும் என கலெக்டர் துர் காமூர்த்தி, தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் ப.மகேஸ்வரி, உதவித் திட்ட அலுவலர் மற்றும் தலைமை யாசிரியர், பள்ளி மாணவ, மாணவியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# சேலம் மாவட்ட மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

## கலெக்டர் இரா.பிருந்தாதேவி தலைமையில் நடைபெற்றது



**சேலம்,அக்.14-**

சேலம் மாவட்ட ஆட்சி யரகத்தில் மக்கள் குறைதீர்க் கும் நாள் கூட்டம் கலெக்டர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, தலைமையில் (13.10.2025) நடைபெற்றது. பின்னர், கலெக்டர் தெரிவித்ததாவது:

பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்களுக்கு உடனுக்குடன் தீர்வு காண வும், அடிப்படைத் தேவைக ளுக்கு முக்கியத்துவம் அளித் திடவும், பெண்களின் முன் னேற்றத்திற்குத் தேவையான நடவடிக்கைகள் உள்ளிட்ட பணிகளில் அரசு அலுவலர் கள் அனைவரும் ஒருங்கி ணைந்து செயல்பட வேண் டுமெனவும், குறிப்பாக பொதுமக்கள் ஒருமுறை வழங்கிய மனுக்கள் மீண் டும் வராத வகையில் மனு வின் மீது உரிய தீர்வு வழங் கப்படுவதை அலுவலர்கள் உறுதி செய்திட வேண்டு மென அறிவுறுத்தப்பட்டுள் ளது.

அதனடிப்படையில், இன்றைய தினம் நடை பெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக் களிடமிருந்து முதியோர் உத வித்தொகை, இலவச வீட்டு மனைப்பட்டா, பட்டா மாறு தல், சாதிச்சான்று, வேலை வாய்ப்பு, வங்கிக்கடன்கள், கல்வி உதவித்தொகை, திரு மண நிதியுதவி, மாற்றுத்திற னாளிகளுக்கான உதவித்தொ கை, உதவி உபகரணங்கள், குடிநீர் வசதி, சாலை வசதி உட்பட அடிப்படை வசதி கள் மேம்பாடு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி 529 மனுக்கள் வரப்பெற்றன.

மேலும், உங்களுடன் ஸ் டாலின் மற்றும் நலம் காக் கும் ஸ்டாலின் முகாமில் பெறப்பட்ட மனுக்கள் மீது நடவடிக்கை மேற்கொண்டு மாற்றுத்திறனாளிகள் நலத்து றையின் சார்பில் 17 மாற்றுத் திறனாளிகளுக்கு ரூ.7.68 இலட்சம் மதிப்பிலான செயற்கைக்கால்கள் வழங் கப்பட்டுள்ளது. அதே போன்று மாற்றுத்திறனாளி கள் எவ்வித சிரமமும் இன்றி மனுக்களை வழங்கும் வகை யில் மாவட்ட ஆட்சியரகத் தின் தரைத் தளத்தில் மாற் றுத்திறனாளிகளுக்கென நடத்தப்பட்டு வரும் குறை தீர் முகாமில் வீட்டுமனைப் பட்டா, உதவி உபகரணங் கள், பராமரிப்பு உதவித் தொகை உள்ளிட்ட பல் வேறு கோரிக்கைகள் குறித்து அளிக்கப்பட்ட 17 மனுக்க ளைப் பெற்று, உரிய நடவ டிக்கை மேற்கொள்ள தொடர்புடைய அலுவலர்க ளுக்கு அறிவுறுத்தப்பட்டுள் ளது. இவ்வாறு கலெக்டர் டாக்டர்.இரா.பிருந்தாதேவி, தெரிவித்தார்.

முன்னதாக மாநில அள விலான முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டியில் எறிபந்து பிரி வில் தங்கப்பதக்கம் மற்றும் பரிசாக ரூ.5.25 இலட்சம் வென்றதையொட்டி அன்பு இல்லத்தைச் சேர்ந்த மாண வர்கள் கலெக்டர் டாக்டர். இரா.பிருந்தாதேவி,இ.ஆ.ப., அவர்களை மாவட்ட ஆட்சி யரகத்தில் நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

இக் கூட் டத் தில், மாவட்ட வருவாய் அலுவ லர் இரா.ரவிக்குமார், மாவட்ட மாற்றுத்திறனாளி கள் நல அலுவலர் பி.செண் பகவள்ளி உள்ளிட்ட அரசுத் துறை முதன்மை அலுவலர் கள் கலந்துகொண்டனர்.

# பி.ஜி.பி. வேளாண் அறிவியல் கல்லூரியில் கால்நடை வளர்ப்பில் திறன் வளர்ப்பு பயிற்சிகள்



**நாமக்கல்,அக்.14-**

கண்ட்ரி பார்ம்ஸ் மீடியா மற்றும் விருட்சம் பவுண்டே ஷன் சார்பில் ரேரோ இணைப்பில் பி.ஜி.பி. வேளாண் அறிவி யல் கல்லூரியில் நடைபெற்ற கிரீன் காங்க்ளேவ் 2025-இன் முதல் நாள் சிறப்பாக நிறைவு பெற்றது. வேளாண்மையில் ஐஓடி மற்றும் பிற நவீன தொழில்நுட்பங்களின் பயன்பாடு என்ற தலைப்பில் நடந்த குழு விவாதம் பெரும் வரவேற்பை பெற்றது. இதில் ஃபார்ம் அகேன் நிறுவனர் பென்ஜமின் மற் றும் முன்னோடி விவசாயினா பாமையன் ஐயா தங்களின் அரிய அனுபவங்களையும் கருத்துகளையும் பகிர்ந்து கொண் டனர். கேரளாவிலிருந்து வந்த டெரஸ் கார்டனிங் நிபுணர் ரமாபாய், டிராகன் பழ வளர்ப்பில் தன்னுடைய சிறப்பு அனு பவங்களைப் பகிர்ந்தார். மேலும், சத்யம் பயோ சார்பாக வந்த பிரதிநிதி, தங்களின் முக்கியமான சேவைகள் மற்றும் தயாரிப் புகளை அறிமுகப்படுத்தினார்.

இந்நிகழ்வு நிலைத்த மற்றும் இயற்கை வேளாண்மையில் பெரும் ஆர்வத்தை ஏற்படுத்தியது, இதன் மூலம் இரண்டாம் நாளுக்கான உற்சாகமான தொடக்கம் அமைந்தது. நிகழ்ச்சியை ஹோட்டல் சனு இன்டர்நேஷனல் நிறுவனத்தின் உரிமையா ளர் சத்யமூர்த்தி திறந்து வைத்தார். மேலும், வரவேற்புரையை வழங்கிய பசுமை தில்லை சிவக்குமார், கான்க்ளாவின் ஒருங் கிணைப்பாளர் சாமிநாதன், கான்க்ளாவின் தலைமை செயலா ளர் மற்றும் விருட்சம் பவுண்டேஷனின் சிஇஓ சூரஜ் முரளி தரன் முன்னிருந்தனர். கால்நடை அபிவிருத்தி மையம் தலை வாசல் கிருஷ்ணகுமார் தமிழக அரசால் 1000 ஏக்கரில் அமைந் துள்ள கால்நடை அபிவிருத்தி மைய செயல்பாடுகள் கால் நடை வளர்ப்பில் திறன் வளர்ப்பு பயிற்சிகள் பற்றி சிறப்பாக உரையாற்றினார். பிஜிபி கல்வி நிறுவனங்கள் தாளாளர் கண பதி தலைமை உரையாற்றினார். பிஜிபி வேளாண் கல்லூரி முதல்வர் கோபால் கண்காட்சி கருத்தரங்கு குறித்தும் வேளாண் மாணவ மாணவிகள் பங்கேற்பு குறித்து வாழ்த் துரை வழங்கினார். கருத்தரங்கள் நாமக்கல் மாவட்ட முன் னோடி விவசாயிகள் மாணவ, மாணவிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# ராசிபுரத்தில் வாசவி கிளப் மாவட்ட மாநாடு

## மாவட்ட ஆளுநர் தலைமையில் நடைபெற்றது

**ராசிபுரம்,அக்.14-**

வாசவி கிளப் மாவட்ட மாநாடு தனியார் திருமண மண்டபத்தில் மாவட்ட ஆளு நர் வெங்கடேஸ்வர குந்தா தலைமையில் ராசிபுரத்தில் நடைபெற்றது. வாசவி கிளப் இன்டர்நேஷனல் 16வது மாவட்ட மாநாடு மகிழ்வித்து மகிழ் என்ற தலைப்பில் சர்வ தேச தலைவர் இரகுல இராம கிருஷ்ணன் கலந்து கொண்டு பல்வேறு நலத்திட்ட உதவி களை வழங்கினார். அவருக்கு சிறப்பான வரவேற்பு மற் றும் மங்கள வாத்தியங்கள் இசைக்கப்பட்டது. மாவட்ட ஆளுநர் கொடியேற்றி விழாவை தொடங்கி வைத் தார். இந்நிகழ்வில் 20 பள்ளிக ளுக்கு எஃகு பீரோ, குழந்தை களுக்கு சதுரங்க விளை யாட்டு உபகரணங்கள், 15 புள்ளி மாணவர்களுக்கு இல வச சைக்கிள்கள், முதியோர் இல்லத்திற்கு ஆறு மாதத் திற்கு தேவையான மளிகைப் பொருட்களும் அரிசியும் வழங்கப்பட்டது. கலந்து கொண்ட வாசவி வீட்ல உறுப்பினர்களுக்கு முன்னாடி அனுப்பி சங்ககிரி வாசுவி சங் கத்தின் சிறுதானிய லட்டுக ளும், சேலத்தின் ஸ்பெஷல் காரபன்னும், தண்ணீர் பாட்டி லும் அதிர்ஷ்ட குலுக்கல் நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சி யின் தொடக்கத்தில் பரதநாட் டியம் மற்றும் கலை நிகழ்ச்சி கள் சிறப்பாக நடைபெற்றது. விழாவில் அன்பு ரவி, விஎன் கோல்டன் சத்யா விழாவை சிறப்பாக வழி நடத்தினார் கள். பிடிஜி, துணை ஆளுநர் கள், ஐபிசி, ஆர்சி, மாவட்ட அதிகாரிகள், மண்டல விருது கள் வழங்கி சிறப்பித்தார்கள். மேலும் இந்த வருடத்தில் சிறப்பாக மாவட்டத்தை எடுத்துச் சென்ற அனைத்து வாசவி சங்கங்களுக்கும் தலைவர் செயலாளர் மற்றும் பொருளாளர் மற்றும் சங்கங் கள் உறுதுணையாக இருந்த வர்களுக்கு விருதுகளும் பாராட்டுக்களும் வழங்கப் பட்டன. சர்வதேச தலைவர் அவர்களின் சிறப்புரை அனைவரின் மனதையும் கவர்ந்ததாக இருந்தது. சர்வ தேச தலைவருக்கும், ஆறு மண்டலத் தலைவருக்கும், நமது மாவட்ட கவர்னர் நினைவுப் பரிசு வழங்கி கௌரவித்தார். அதிர்ஷ்ட குலுக்கல் முறையில் தேர்ந் தெடுக்கப்பட்டவருக்கு 120 பரிசுகள் வழங்கப்பட்டது . மண்டலத் விஐ ஆர்சி சில்வர் ரூபாய் 2500 மதிப்புள்ள புட வைகள் 12 நபர்களுக்கு வழங் கினார்கள். கம்பர் பரிசாக ஆறு நபர்களுக்கு சௌபாக் கிய வெட்கிரைண்டர் வழங் கப்பட்டது. இவ்விழாவில் மாவட்ட ஆளுநர் வெங்க டேஸ்வர குப்தா, மண்டல தலைவர் ஸ்ரீ லட்சுமி பிரியா, நிகழ்ச்சி தலைவர்கள் பாலா வெங்கட மணி மற்றும் ஆர். கே பத்ரி உள்ளிட்ட ஏராள மான வாசவி கிளப் நிர்வாகி கள் கலந்து கொண்டனர்.

நாட்டுக்கு சுதந்திரம்
கிடைத்தது நமக்கு
பெருமை
நாட்டை சுத்தமாக
வைப்பது நமது கடமை

**ENROLMENT NOTICE**

After ten days of the publication of this notice and within Three Months thereafter. I, **SRIVISHNU D S/o. Dhanapal, Date of Birth : 30.10.1996, Permanently Residing at : D.No. 231, Murugan Kovil Street, Thalaimalai Nagar, Seelanaickenpatti (PO), Dadagapatti, Salem District, Tamilnadu - 636 006.** Intend having my enrolment as an advocate moved before the Bar Council of Tamil Nadu and Puducherry, Bar Council Buildings High Court Campus, Chennai- 600 104. Those who have any valid objections may notify the same to the Bar Council within Ten days.

**SRIVISHNU D**

**காணவில்லை**

நான் கடந்த **24.11.2023** ம் தேதியன்று கீழ்கண்ட முகவரியில் உள்ள எனது வீட்டிலிருந்து நங்கவள்ளியிலிருந்து மேசேரி செல்லும் சாலையில் எனது இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது எனது **10** ம் வகுப்பு மற்றும் **12** ம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ்கள் தவறிவிட்டது. மேற்கண்ட அசல் ஆவணங்களை கண்டெடுத்தவர்கள் கீழ்கண்ட முகவரிக்கோ அல்லது நங்கவள்ளி காவல் நிலையத்திற்கோ தகவல் தெரிவிக்கவும்.

இப்படிக்கு:
K.சந்தோஷ்குமார்,
த/பெ. கோவிந்தராஜு
க.எண்.1-59/1, அம்மன் கோவில்
காட்டுவளவு, சூரப்பள்ளி அஞ்சல்,
மேட்டூர் வட்டம், சேலம் மாவட்டம் -501.

**ENROLMENT NOTICE**

After ten days of the publication of this notice and within Three Months thereafter. I, **SUDHARSHINI R D/o. Raju, Date of Birth : 08.08.2001, Permanently Residing at : D.No. 1/301, Kothanur, Perumampatti, Perumampatti (PO), Salem District, Tamilnadu - 636 307.** Intend having my enrolment as an advocate moved before the Bar Council of Tamil Nadu and Puducherry, Bar Council Buildings High Court Campus, Chennai- 600 104. Those who have any valid objections may notify the same to the Bar Council within Ten days.

**SUDHARSHINI R**

தருமபுரி மாவட்ட சிறப்பு நீதிபதி நீதிமன்றம்.
(மோட்டார் வாகன விபத்து கோரிக்கை தீர்ப்பாயம்)
**M.C.O.P.No. 375/2025**

T.ராஜேந்திரன், த/பெ. தங்கவேல்,
க.எண்.2/248, கொமத்துப்பட்டி,
தின்னஅள்ளி, நல்லசேனஅள்ளி,
தருமபுரி வட்டம், தருமபுரி மாவட்டம்.
...மனுதாரர்

இடையே

A.பிரமி, க/பெ.ஆதி,
க.எண்.2/109, எட்டியானூர்,
நல்லசேனஅள்ளி, தின்ன அள்ளி,
தருமபுரி வட்டம், தருமபுரி -636 804.
...1 ம் எதிர்மனுதாரர்

1 ம் எதிர்மனுதாரருக்கு அறிவிப்பு

மேற்படி மனுதாரர் 1 ம் எதிர்மனுதாரர் ஆகிய உங்கள் பேரில் விபத்து இழப்பீடு வேண்டி மேற்படி மனுவினை தாக்கல் செய்துள்ளனர். மேற்படி வழக்கு வருகின்ற **22.10.2025** ம் தேதி அன்று மேற்படி நீதிமன்றத்தில் பட்டியலிடப்பட்டுள்ளது. மேற்படி நாளில் அன்று காலை 10.00 மணிக்கு மேற்படி நீதிமன்றத்தில் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாவோ ஆஜராகி 1 ம் எதிர்மனுதாரராகிய உங்களது ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறினால் மேற்படி வழக்கில் மேல் நடவடிக்கைக்கு உத்தரவிடப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்.

/கோர்ட் உத்தரவுப்படி/

M.ரம்யா.B.Com.,L.L.B.,
வழக்கறிஞர், சேலம்.

## டெல்லி 2-வது டெஸ்ட் போட்டி:
# இன்னும் 58 ரன்கள் மட்டும்தான்; வெற்றி விளிம்பில் இந்திய அணி



**புதுடெல்லி, அக். 14-**

மே.இ.தீவுகள் அணிக்கு எதிரான 2-வது இன்னிங்சில் நேற்று 4ம் நாள் முடிவில் இந்தியா 1 விக்கெட்டை இழந்து 63 ரன்கள் எடுத்துள்ளது. இந்தியா தரப்பில் ராகுல் 25 ரன்னுடனும், சுதர்சன் 30 ரன்னுடனும் களத்தில் உள்ளனர். இந்தியாவின் வெற்றிக்கு இன்னும் 58 ரன்கள் தேவைப்படுகிறது.

**2-வது இன்னிங்ஸ்...**

இந்தியா- வெஸ்ட் இண்டீஸ் அணிகள் மோதும் 2-வது டெஸ்ட் போட்டி கடந்த 10-ந் தேதி தொடங்கி நடைபெற்று வருகிறது. இதில் முதலில் பேட்டிங் செய்த இந்திய அணி முதல் இன்னிங்சில் 5 விக்கெட் இழப்பிற்கு 518 ரன்கள் குவித்தது. இதனையடுத்து முதல் இன்னிங்சை தொடங்கிய வெஸ்ட் இண்டீஸ் அணி 248 ரன்னில் ஆல் அவுட் ஆனது. இதனால் பால் ஆன வெஸ்ட் இண்டீஸ் அணி தொடர்ந்து 2-வது இன்னிங்சை விளையாடி வருகிறது.

**சிறப்பான ஆட்டம்...**

தொடக்கத்திலேயே 2 விக்கெட்டுகளை வெஸ்ட் இண்டீஸ் அணி பறிகொடுத்தது. இதனையடுத்து தொடக்க வீரர் ஜான் ஜாம்பெல் மற்றும் சாய் ஹோப் ஜோடி சேர்ந்து பொறுப்புடன் பொறுப்புடன் விளையாடி அணியின் ஸ்கோரை உயர்த்தினர். தொடர்ந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய ஜான் கெம்பல், டெஸ்டில் தனது முதலாவது சத்தை பதிவு செய்தார். அவர் 115 ரன்கள் எடுத்த நிலையில் ஜடேஜா பந்து வீச்சில் ஆட்டமிழந்தார்.

**சாய் ஹோப் சதம்...**

அதனை தொடர்ந்து சாய் ஹோப்புடன் கேப்டன் ரோஸ்டன் சேஸ் ஜோடி சேர்ந்தார். இருவரும் நிதானமாக விளையாடினர். சிறப்பாக விளையாடிய சாய் ஹோப் சதம் அடித்து அசத்தினர். அவரும் சதம் அடித்த சிறிது நேரத்தில் சிராஜ் பந்து வீச்சில் அவுட் ஆனார். அவரை தொடர்ந்து நிதானமாக விளையாடிய வந்த கேப்டன் சேஸ் 40 ரன்னில் ஆட்டமிழந்தார். அதனை தொடர்ந்து வந்த வீரர்கள் அடுத்தடுத்து விக்கெட்டுகளை பறிக்கொடுத்தனர்.


**121 ரன்கள் இலக்காக....**

இதனால் வெஸ்ட் இண்டீஸ் அணி 311 ரன்களுக்கு 9 விக்கெட்டை இழந்திருந்தது. இதனையடுத்து கடைசி விக்கெட்டுக்கு ஜஸ்டின் க்ரீவ்ஸ் உடன் ஜெய்டன் சீல்ஸ் ஜோடி சேர்ந்து சிறப்பாக விளையாடினர். இந்த ஜோடியை பிரிக்க முடியாமல் இந்திய அணியின் பந்து வீச்சாளர்கள் திணறினர். இதில் க்ரீவ்ஸ் அரை சதம் அடித்து அசத்தினார். இறுதியில் ஜெய்டன் சீல்ஸ் 32 ரன்னில் ஆட்டமிழந்தார். இதனால் வெஸ்ட் இண்டீஸ் அணி 390 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது. இந்திய தரப்பில் குல்தீப் யாதவ் 3 விக்கெட்டும் பும்ரா 2 விக்கெட்டும் வீழ்த்தினர். வெஸ்ட் இண்டீஸ் 390 ரன்கள் குவித்ததன் மூலம் இந்தியாவுக்கு 121 ரன்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

**8 ரன்களில் அவுட்....**

இதையடுத்து 121 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இந்தியா தனது 2வது இன்னிங்சை தொடங்கியது. இந்தியாவின் தொடக்க வீரர்களாக ராகுல் மற்றும் ஜெய்ஸ்வால் களம் கண்டனர். இதில் ஜெய்ஸ்வால் 8 ரன்களில் அவுட் ஆனார். தொடர்ந்து சாய் சுதர்சன் களம் கண்டார். சுதர்சன் - ராகுல் இணை நிதானமாக ஆடி ரன்கள் சேர்த்தது. இறுதியில் 4ம் நாள் முடிவில் இந்தியா 1 விக்கெட்டை இழந்து 63 ரன்கள் எடுத்துள்ளது. இந்தியா தரப்பில் ராகுல் 25 ரன்னுடனும், சுதர்சன் 30 ரன்னுடனும் களத்தில் உள்ளனர். இந்தியாவின் வெற்றிக்கு இன்னும் 58 ரன்கள் தேவைப்படுகிறது.

# பெயருக்காக நான் பணியாற்றவில்லை: இந்திய அணியின் பயிற்சியாளர் காம்பீர்



**மும்பை, அக். 14-**

பெயருக்காக நான் பணியாற்றவில்லை என்று இந்திய அணியின் தலைமை பயிற்சியாளர் காம்பீர் தெரிவித்துள்ளார்.

**என்னுடைய பங்கு...**

இந்திய கிரிக்கெட் அணியின் தலைமை பயிற்சியாளர் கவுதம் காம்பீர்தான் அணியைப் பொறுத்தவரை அனைத்து முடிவுகளையும் எடுக்கிறார் மற்றவர்களுக்கு அங்கு வாய்ப்பே இல்லை என்ற விமர்சனங்களுக்குப் பதிலளிக்கும் வகையில் அண்மையில் அவர் கூறியுள்ளார். ஆனால், ரோகித் சர்மா, விராட் கோலி குறைந்தது இரண்டு ஃபார்மட் ஆடிக் கொண்டிருந்தவர்கள் ஒரு ஃபார்மட் வீரர்களாக மாறப்பட்டுள்ளனர். டெஸ்ட்டிலிருந்து ஓய்வு அறிவிக்கும் அளவுக்கு விஷயங்கள் நடந்து விட்டன. ஆனால், காம்பீர் என்னுடைய பங்கு ஒன்றுமல்ல என்று கூறி வருகிறார்.

**சுதந்திரமானவர்....**

மேற்கு இந்தியத் தீவுகளுடன் டெல்லி டெஸ்ட்டின் போது ஆகாஷ் சோப்ராவுக்கு பேட்டியளித்த கவுதம் காம்பீர் இவ்வாறு கூறினார்: டி20 அணியின் கேப்டன் சூர்யகுமார் யாதவ்தான். அது அவருடைய டி20 அணி என்னுடையது அல்ல. டெஸ்ட் மற்றும் ஒருநாள் அணிக்கு சுப்மன் கில் கேப்டன். அது அவருடைய அணி என்னுடையது அல்ல. சூர்யகுமார் யாதவ் டி20 கிரிக்கெட்டுக்குரிய கேரக்டர் கொண்டவர். களத்திலிருந்தாலும் வெளியே இருந்தாலும் சூர்யகுமார் யாதவ் சுதந்திரமானவர். நம்மை வெளிப்படுத்திக் கொள்ளும் விதம் தானே எல்லாம். களத்தில் ஆளுமையாகவும் களத்திற்கு வெளியே ஒரு குணாம்சமுடைய நபராகவும் அவர் இருக்கிறார்.

**தோல்விப் பயத்தை...**

ஒவ்வொரு சூழ்நிலையைப் பாருங்கள். கிட்டத்தட்ட ஓராண்டுக்கு மேலாக அவர் ஓய்வறையில் ஏற்படுத்தியிருக்கும் தாக்கம் பெரிது. ஆசியக் கோப்பை வெற்றி முதல் முடிவுகளையும் பாருங்கள். ஹை ரிஸ்க் ஹை ரிவார்ட் கிரிக்கெட் அது. நான் சூர்யாவுடன் வைத்துக் கொண்ட முதல் உரையாடலிலேயே நாம் தோல்விப் பயத்தை விட்டொழிப்போம் என்பதே. இந்திய கிரிக்கெட் வரலாற்றில் மிக வெற்றியடைந்த பயிற்சியாளர் என்ற பெயருக்காக நான் பணியாற்றவில்லை. மாறாக அச்சமற்ற அணி என்ற நிலையை அடைவதே முக்கியம் என்பதை வலியுறுத்தினேன்.

**கவலைப்படக் கூடாது...**

வெற்றிபெற்ற அணியாக இருக்க வேண்டும் என்று ஆட நினைத்தால் அது அணியின் மீது அழுத்தங்களையே அதிகரிக்கும். பெரிய அணிகளுக்கு இடையே ஆடும் போது எவ்வளவு அச்சமற்ற முறையில் ஆடுகிறோமோ அத்தனைக்கத்தனை ரிசல்ட் சாதகமாக இருக்கும். பெரிய போட்டிகளில் தவறுகள் இழைப்பது பற்றி கவலைப்படக் கூடாது. இதைத்தான் ஆசியக் கோப்பையின் போது நாங்கள் உரையாடினோம்.

**என் மீது தான் அழுத்தம்...**

பாகிஸ்தானுடனான போட்டி என்று அழுத்தத்தை உணர வேண்டாம். கேட்ச் விட்டால் பரவாயில்லை, மோசமான ஷாட்டில் அவுட் ஆனால் பரவாயில்லை. அதே போல் பவுலிங்கும் மோசமாக அமைவது பற்றி கவலை வேண்டாம். தவறு செய்தால் என்ன ஆகும் என்பதை யோசிக்கத் தேவையில்லை. இவையெல்லாம் அழுத்தங்களை அதிகரிக்கும். ஓய்வறையில் இருக்கும் 30 பேர்களின் கருத்துக்களே முக்கியம். மக்கள் நினைப்பவற்றைப் பற்றி கவலைப்பட வேண்டியதில்லை. ஏனெனில் நாங்கள் அனுபவிக்கும் அழுத்தங்களை அவர்கள் அனுபவிப்பதில்லை. என் மீது அழுத்தம் உள்ளது என்று அவர் கூறினார்.

## 2025-ல் அதிக டெஸ்ட் விக்கெட்டுகள்-
# முதல் இடத்தில் முகமது சிராஜ்



**புதுடெல்லி, அக். 14-**

2025-ம் ஆண்டில் அதிக டெஸ்ட் விக்கெட்டுகள் எடுத்தவர்களில் முகமது சிராஜ் முதல் இடத்தில் உள்ளார்.

**121 ரன்கள் இலக்கு...**

இந்தியா- வெஸ்ட் இண்டீஸ் அணிகள் 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் நடந்த முதல் டெஸ்டில் இந்திய அணி வெற்றி பெற்று விட்டது. இதனையடுத்து இரு அணிகளுக்கு இடையேயான 2-வது டெஸ்ட் இன்றுடன் முடிகிறது. இந்த போட்டியில் இந்திய அணிக்கு 121 ரன்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இன்றைய 4-வது ஆட்ட நேர முடிவில் இந்தியா 63 ரன்கள் எடுத்துள்ளது. இந்திய அணி வெற்றி பெற இன்னும் 58 ரன்கள் தேவையாக உள்ளது. இந்தியா வெற்றி பெறவே அதிக அளவில் வாய்ப்புள்ளது.

**37 விக்கெட்களுடன்...**

இந்நிலையில் இந்த தொடரில் சிராஜ் முதல் டெஸ்டில் 7 விக்கெட்டும் 2-வது டெஸ்டில் 3 விக்கெட்டும் வீழ்த்தியுள்ளார். இதன் மூலம் இந்த ஆண்டில் டெஸ்டில் அதிக விக்கெட்டுகளை கைப்பற்றிய வீரராக சிராஜ் (37 விக்கெட்) மாறி உள்ளார். இவருக்கு அடுத்தப்படியாக ஜிம்பாப்வே அணியை சேர்ந்த முசரபானி 36 விக்கெட்டுடன் 2-வது இடத்தில் உள்ளார். அதனை தொடர்ந்து ஸ்டார்க் (29), நாதன் லயன் (24), ஜோமல் வாரிகன் (23) என அதற்கு அடுத்தடுத்த இடத்தில் உள்ளனர்.

## 19 ஆண்டுகளுக்கு பிறகு சதம்

இந்தியா- வெஸ்ட் இண்டீஸ் அணிகள் மோதும் 2-வது டெஸ்ட் போட்டி கடந்த 10-ந் தேதி தொடங்கி நடைபெற்று வருகிறது. இதில் முதலில் பேட்டிங் செய்த இந்திய அணி முதல் இன்னிங்சில் 5 விக்கெட் இழப்பிற்கு 518 ரன்கள் குவித்தது. இதனையடுத்து முதல் இன்னிங்சை தொடங்கிய வெஸ்ட் இண்டீஸ் அணி 248 ரன்னில் ஆல் அவுட் ஆனது. இதனால் பால் ஆன வெஸ்ட் இண்டீஸ் அணி தொடர்ந்து 2-வது இன்னிங்சை விளையாடியது.

தொடக்கத்திலேயே 2 விக்கெட்டுகளை வெஸ்ட் இண்டீஸ் அணி பறிகொடுத்தது. இதனையடுத்து தொடக்க வீரர் ஜான் ஜாம்பெல் மற்றும் சாய் ஹோப் ஜோடி சேர்ந்து பொறுப்புடன் விளையாடி அணியின் ஸ்கோரை உயர்த்தினர். தொடர்ந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய ஜான் கெம்பல், டெஸ்டில் தனது முதலாவது சத்தை பதிவு செய்தார். இதன்மூலம் இந்தியாவுக்கு எதிராக 19 ஆண்டுக்கு பிறகு வெஸ்ட் இண்டீஸ் அணியின் தொடக்க வீரர் சதம் அடித்து சாதனை படைத்துள்ளார்.

# தமிழகத்தில் கனமழைக்கு வாய்ப்பு

**சென்னை, அக். 14-**

தமிழகத்தில் இன்று முதல் அக்.19-ம் தேதி வரை 6 நாட்கள் ஒரு சில மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது என தெரிவித்துள்ள சென்னை வானிலை ஆய்வு மையம், இன்று கோவை, நீலகிரி உள்ளிட்ட 4 மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: ”தென் மேற்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய தென் தமிழக கடலோர பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. மேலும் கடலோர ஆந்திரா மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக தமிழகத்தில் இன்று (அக்.14), நாளை (அக்.15) ஒருசில இடங்களிலும், அக்.16 முதல் அக்.19-ம் தேதி வரை பெரும்பாலான இடங்களிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

தமிழகத்தில் இன்று (அக்.14-ம்) கோவை மாவட்ட மலைப் பகுதிகள், நீலகிரி, தேனி மற்றும் தென்காசி மாவட்டங்களிலும், அக்.15-ம் தேதி திருநெல்வேலி மாவட்டத்தின் மலைப் பகுதிகள், கன்னியாகுமரி, தூத்துக்குடி, ராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை, டெல்டா மாவட்டங்களான தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்களிலும்.

அக்.16-ம் தேதி கோவை மாவட்டத்தின் மலைப் பகுதிகள், நீலகிரி, திண்டுக்கல், தேனி, தென்காசி, மதுரை, சிவகங்கை, விருதுநகர், ராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, புதுக்கோட்டை, கடலூர் மற்றும் டெல்டா மாவட்டங்களிலும், காரைக்கால் பகுதிகளிலும் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

மேலும், அக்.17-ம் தேதி கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி, விருதுநகர், மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம், புதுக்கோட்டை, டெல்டா மாவட்டங்களிலும், அக்.18ம் தேதி கோவை மாவட்டத்தின் மலைப் பகுதிகள், நீலகிரி, கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி, விருதுநகர், ராமநாதபுரம், மதுரை, சிவகங்கை, தேனி, திண்டுக்கல், புதுக்கோட்டை, டெல்டா மாவட்டங்கள், கடலூர், விழுப்புரம், செங்கல்பட்டு மாவட்டங்களிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும், அக்.19-ம் தேதி கோவை மாவட்டத்தின் மலைப் பகுதிகள், நீலகிரி, கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, ராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டங்களிலும் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று (அக்.14-ம் தேதி) வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசான அல்லது மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்திய குடும்பங்களில் மட்டும் 34,600 டன் தங்கம் கையிருப்பு..!

**சென்னை, அக். 14-**

கடந்த 2 ஆண்டுகளில் சுமார் 9 ஆயிரத்து 600 டன் வரை தங்க இருப்பு இந்திய குடும்பங்களில் அதிகரித்துள்ளது.

உலகில் சீனாவுக்கு அடுத்தபடியாக தங்க நுகர்வு செய்வதில் இந்தியாதான் இருக்கிறது. காரணம், வீட்டில் ஒரு குண்டுமணி தங்கமாவது இருக்க வேண்டும் என்ற முனைப்பில் சிறுக சிறுக பணம் சேர்த்து வாங்கும் வழக்கம் இன்றளவும் இந்திய குடும்பங்களில் இருந்து வருகிறது. அதிலும், இந்தியாவில் திருமணம், விசேஷங்கள் மற்றும் பண்டிகைகளின் போது தங்கம் வாங்குவது பாரம்பரியாக இருக்கிறது.

இந்தியாவில் தங்க உற்பத்தி மிகக்குறைவாக இருப்பதால், தங்க நுகர்வுத் தேவையை பூர்த்தி செய்ய பெரும்பாலும் வெளிநாடுகளில் இருந்தே இறக்குமதி செய்யப்படுகிறது. இன்று தங்கம் விலை ஒவ்வொரு நாளும் உயர்ந்து உச்சத்துக்கு சென்று கொண்டிருக்கிறது. ஆனாலும் இந்திய குடும்பங்களில் தங்கத்தை வாங்குபவர்களின் எண்ணிக்கையோ, அதன் மீதான விருப்பமோ கொஞ்சமும் குறையவில்லை என்பதை பல தங்கம் சார்ந்த புள்ளி விவரங்கள் சுட்டிக்காட்டுகின்றன. அப்படி ஒரு புள்ளி விவரத்தைத்தான் உலக தங்க கவுன்சில் சமீபத்தில் வெளியிட்டு இருக்கிறது.

அதில், இந்திய குடும்பங்களில் ஒட்டுமொத்தமாக சுமார் 34,600 டன் தங்கம் இருப்பு இருப்பதாக சொல்லப்பட்டு உள்ளது. இது ஆபரணமாகவோ, நாணயமாகவோ, கட்டியாகவோ இருக்கலாம் என கூறப்படுகிறது. தற்போதைய சந்தை விலையின் அடிப்படையில் பார்க்கும்போது, இதன் மதிப்பு சுமார் ரூ.337 லட்சம் கோடி என கணக்கிடப்பட்டிருக்கிறது.

இந்த தங்க இருப்பு, இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 88.8 சதவீதம் எனவும், இந்திய குடும்பங்களில் இருக்கும் தங்க இருப்பு என்பது, உலக நாடுகளின் மத்திய வங்கிகள் வைத்திருக்கும் மொத்த தங்க இருப்புகளை விட அதிகம் எனவும் சொல்லப்படுகிறது.

இதற்கு முன்பு அதாவது, கடந்த 2023-ம் ஆண்டு உலக தங்க கவுன்சில் இதேபோல் வெளியிட்டிருந்த புள்ளி விவரங்களில் இந்திய குடும்பங்களில் சுமார் 25 ஆயிரம் டன் தங்கம் இருப்பதாக சொல்லப்பட்டு இருந்தது. அதனுடன் ஒப்பிடுகையில், கடந்த 2 ஆண்டுகளில் சுமார் 9 ஆயிரத்து 600 டன் வரை தங்க இருப்பு இந்திய குடும்பங்களில் அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## கோவை, வால்பாறை அருகே
# காட்டு யானை தாக்கி 2 பேர் பலி

**கோவை, அக். 14-**

வால்பாறை அருகே காட்டு யானை தாக்கியதில் குழந்தை உள்பட 2 பேர் உயிரிழந்தனர்.

கோவை மாவட்டம் வால்பாறை அருகே கடம்பாறை என்ற கிராமம் உள்ளது. இந்த கிராமத்திற்குள் நேற்று முன்தினம் இரவு காட்டு யானை புகுந்தது. கிராமத்தில் உள்ள ஒரு வீட்டிற்குள் புகுந்த காட்டு யானை அங்கு உறங்கிக்கொண்டிருந்த அஞ்சலா (வயது 55) என்ற பெண்ணையும், அவரது பேத்தியான ஹேமாஸ்ரீ (வயது ஒன்றரை) என்ற பச்சிளம் குழந்தையும் தாக்கியது.

யானை தாக்கியதில் பச்சிளம் குழந்தை சம்பவ இடத்திலேயே உயிரிழந்தது. அதேவேளை, அஞ்சலாவின் அலறல் சத்தம் கேட்டு விரைந்துச் என்ற கிராம மக்கள் காட்டு யானையை விரட்டியுள்ளனர். பின்னர், படுகாயங்களுடன் அஞ்சலாவை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இந்த சம்பவம் குறித்து போலீசார், வனத்துறைக்கு தகவல் கொடுத்தனர். தகவலறிந்து சென்ற போலீசார் , யானை தாக்கி உயிரிழந்த பச்சிளம் குழந்தையின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், இந்த சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தி வருகின்றனர்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று தலைமை செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை சார்பில் 43 கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 4 திருக்கோயில்களில் 4 புதிய திட்டப் பணிகள் மற்றும் ஒரு உதவி ஆணையர் அலுவலக கட்டுமானப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 48 கோடியே 81 இலட்சம் ரூபாய் செலவில் 7 திருக்கோயில்களில் 13 முடிவுற்ற பணிகள், ஒரு இணை ஆணையர் அலுவலகம், 13 ஆய்வர் அலுவலகங்களை காணொலிக்காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

## கரூர் சம்பவம் தொடர்பாக
# சுப்ரீம் கோர்ட் உத்தரவுக்கு விஜய் வரவேற்பு



**சென்னை, அக். 14-**

கரூர் சம்பவம் தொடர்பாக சுப்ரீம் கோர்ட்த்தின் உத்தரவுக்கு விஜய் வரவேற்று பதிவு வெளியிட்டுள்ளார்.

கரூர் சம்பவம் தொடர்பாக சென்னை ஐகோர்ட்டு தனி நீதிபதி, விசாரணை குழு அமைக்க பிறப்பிக்கப்பட்ட உத்தரவுக்கு எதிராக சுப்ரீம் கோர்ட்டில் தமிழக வெற்றிக்கழகம் சார்பில் மனுதாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனு மீதான விசாரணை சுப்ரீம் கோர்ட்டில் நடைபெற்றது. இந்த மனு, நீதிபதிகள் மகேஸ்வரி, அஞ்சாரியா ஆகியோர் கொண்ட அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது தமிழக போலீசை மட்டும் கொண்ட சிறப்பு புலனாய்வு குழு மீது எங்களுக்கு நம்பிக்கை இல்லை. எனவே ஓய்வு பெற்ற நீதிபதி தலைமையில் விசாரணை குழு அமைக்கப்பட வேண்டும் என்று த.வெ.க. தரப்பு வலியுறுத்தியது. இந்த வழக்கை நேற்று விசாரித்த உச்ச நீதிமன்றம், கரூர் கூட்டநெரிசல் வழக்கை சிபிஐ விசாரணைக்கு மாற்றி உத்தரவிட்டது.

இந்நிலையில், த.வெ.க. தலைவர் விஜய் சுப்ரீம் கோர்ட்த்தின் தீர்ப்புக்கு வரவேற்பு தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக விஜய் தனது எக்ஸ் தள பக்கத்தில், “நீதி வெல்லும்!” என பதிவிட்டுள்ளார்.

## 14 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு:
# தமிழ்நாட்டில் ரூ.15 ஆயிரம் கோடி முதலீடு செய்யும் 'ஃபாக்ஸ்கான்'
## அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா தகவல்

**சென்னை, அக். 14-**

தமிழ்நாட்டில் ‘ஃபாக்ஸ்கான்’ நிறுவனம் ரூ.15 ஆயிரம் கோடி முதலீடு செய்யவுள்ளதாகவும், இதன் மூலம் 14 ஆயிரம் பேருக்கு புதிதாக வேலைவாய்ப்பு உருவாகும் என்றும் அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் முதல்வர் ஸ்டாலின் தலைமையிலான அரசு தொடர்ச்சியாக பல்வேறு முதலீடுகளை ஈர்த்த வண்ணம் இருக்கிறது. அனைத்து மாவட்டங்களிலும் முதலீட்டாளர்கள் மாநாடு, அனைத்து மாவட்டங்களிலும் டைடல் பூங்காக்கள் என பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

ஃபாக்ஸ்கான் நிறுவனம் சென்னை அருகே ஸ்ரீபெரும்புதூரில் தன்னுடைய ஐபோன் உற்பத்தி ஆலையை நிறுவி செயல்படுத்தி வருகிறது. இதன் மூலம் ஆயிரக்கணக்கான வேலைவாய்ப்புகள் உருவாகி இருக்கின்றன. தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படக்கூடிய ஐபோன்கள் உலகம் முழுவதும் விற்பனை செய்யப்படுகின்றன.

அந்த வகையில் அடுத்த கட்டமாக ஃபாக்ஸ்கான் நிறுவனம் தமிழ்நாட்டில் மேலும் ரூ.15,000 கோடி முதலீடு செய்வதாக உறுதி அளித்துள்ளது. சென்னை அருகே மிகப்பெரிய ஆலையையை அமைக்க வாய்ப்பு இருப்பதாக தெரிகிறது. இந்த ஒப்பந்தம் மூலம் தொழிற்சாலை தொடங்கப்பட்டால், 14,000 பேருக்கு புதிதாக வேலை கிடைக்கும். முதல்வர் மு.க.ஸ்டாலினை சந்தித்த ஃபாக்ஸ்கான் இந்தியாவின் பிரதிநிதி ராபர்ட் வூ இதனை உறுதி செய்துள்ளார்.

இதுபற்றி எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ள தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா, தமிழ்நாட்டின் பொறியியல் மற்றும் உயர் தொழில்நுட்ப உற்பத்தித் துறைக்கு ஒரு பெரிய ஊக்கமளிக்கும் வகையில், ஃபாக்ஸ்கான் நிறுவனம் தமிழ்நாட்டில் மிகப்பெரிய முதலீடு மற்றும் வேலைவாய்ப்பு உறுதிமொழியை அளித்துள்ளது. ரூ.15,000 கோடி முதலீடு மூலம் 14,000 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். தமிழ்நாட்டை இந்தியாவின் முன்னணி எலக்ட்ரானிக்ஸ் உற்பத்தி மையமாக மாற்றும் முக்கிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## ஆய்வு செய்யாமல் உத்தரவிடுவதா..?
# கரூர் கூட்டநெரிசல் வழக்கில் ஐகோர்ட் நீதிபதிக்கு கண்டனம்

**புதுடெல்லி, அக். 14-**

கரூரில் தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் பிரசாரத்தின்போது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். இதுகுறித்து சென்னை ஐகோர்ட் உத்தரவுப்படி ஐ.ஜி. அஸ்ரா கார்க் தலைமையிலான சிறப்பு புலனாய்வு குழு விசாரணை நடத்தி வருகிறது. இந்த சிறப்பு புலனாய்வு குழு விசாரணைக்கு தமிழக வெற்றிக்கழகம் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

சென்னை ஐகோர்ட் தனி நீதிபதி, கரூர் சம்பவம் தொடர்பாக விசாரணை குழு அமைக்க பிறப்பிக்கப்பட்ட உத்தரவுக்கு எதிராக சுப்ரீம் கோர்ட்டில் தமிழக வெற்றிக் கழகம் சார்பில் மனுதாக்கல் செய்யப்பட்டது. இந்த மனு மீதான விசாரணை சுப்ரீம் கோர்ட்டில் நடைபெற்றது. இந்த மனு, நீதிபதிகள் மகேஸ்வரி, அஞ்சாரியா ஆகியோர் கொண்ட அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது தமிழக போலீசை மட்டும் கொண்ட சிறப்பு புலனாய்வு குழு மீது எங்களுக்கு நம்பிக்கை இல்லை. எனவே ஓய்வு பெற்ற நீதிபதி தலைமையில் விசாரணை குழு அமைக்கப்பட வேண்டும் என்று தவெக தரப்பு வலியுறுத்தியது.

இந்நிலையில், இந்த வழக்கை நேற்று விசாரித்த சுப்ரீம் கோர்ட், கரூர் கூட்ட நெரிசல் வழக்கை சி.பி.ஐ. விசாரணைக்கு மாற்றி உத்தரவிட்டது. கரூர் கூட்ட நெரிசல் வழக்கை விசாரித்த விதத்திற்கு சென்னை உயர்நீதிமன்றத்துக்கு சுப்ரீம் கோர்ட் கண்டனம் தெரிவித்தது. எதையும் ஆய்வு செய்யாமல் சென்னை உயர்நீதிமன்ற தனி நீதிபதி சிறப்பு புலனாய்வு குழுவுக்கு உத்தரவிட்டுள்ளார் என கூறிய சுப்ரீம் கோர்ட், சிறப்பு விசாரணை குழு விசாரணைக்கு உத்தரவிட்டது எப்படி என்றும் சென்னை உயர்நீதிமன்றத்திடம் சுப்ரீம் கோர்ட் விளக்கம் கேட்டுள்ளது.

பரப்புரை குறித்து வழிகாட்டு நெறிமுறைகள் வகுக்க கோரிய வழக்கு, கிரிமினல் வழக்காக பட்டியலிடப்பட்டது எப்படி? என உயர்நீதிமன்ற தலைமை பதிவாளர் அறிக்கை தர ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# த.வெ.க. கரூர் மேற்கு மாவட்ட செயலாளர் ஜாமீன் மனு மீதான விசாரணை ஒத்திவைப்பு

**கரூர், அக். 14-**

கரூர் மாவட்டம் வேலுசாமிபுரத்தில் கடந்த செப்.27-ம் தேதி நடந்த த.வெ.க. பிரச்சாரக் கூட்டத்தில் நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். 100-க்கும் அதிகமானோர் காயமடைந்தனர். இது தொடர்பாக கரூர் நகர போலீஸார் த.வெ.க. கரூர் மேற்கு மாவட்ட செயலாளர் வி.பி.மதியழகன், பொதுச்செயலாளர் புஸ்ஸி ஆனந்த், மாநில இணைச் செயலாளர் நிர்மல்குமார் ஆகியோர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது. இவ்வழக்கில் தலைமறைவாக இருந்த மதியழகனை திண்டுக்கல் மாவட்டம் குஜிலியம்பாறை அருகே தனிப்படை போலீஸார் செப்.29-ம் தேதி கைது செய்தனர். மேலும் அவருக்கு அடைக்கலம் கொடுத்த பவுன்ராஜும் கைது செய்யப்பட்டார். விடிய, விடிய விசாரணை நடத்திய போலீஸார் செப்.30-ம் தேதி மருத்துவ பரிசோதனைக்கு பிறகு கரூர் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். இருவரையும் 15 நாள் காவலில் வைக்க உத்தரவிட்டார். இதையடுத்து இருவரும் திருச்சி மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர்.

கரூர் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் அக்.8-ம் தேதி பவுன்ராஜின் ஜாமீன் மனு விசாரணைக்கு வந்த நிலையில் விசாரணை ஆரம்ப கட்டத்தில் உள்ளதால் ஜாமீன் மனு தள்ளுபடி செய்யப்பட்டது. இவ்வழக்கில் சிறப்பு புலனாய்வுக் குழு அமைக்கப்பட்ட நிலையில், மதியழகனை 5 நாள் காவலில் எடுத்து விசாரிக்க கரூர் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தனர். அக்.9-ம் தேதி இரண்டு நாள் விசாரணைக்கு அனுமதி வழங்கப்பட்டது.

விசாரணை முடிந்த நிலையில் அக்.11-ம் தேதி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட மதியழகனை அக்.14-ம் தேதி நீதிமன்ற காவலில் வைக்கு குற்றவியல் நடுவர் நீதிமன்றம் மாஜிஸ்ட்ரேட் உத்தரவிட்டார். இதையடுத்து திருச்சி மத்திய சிறையில் மதியழகன் அடைக்கப்பட்டார். கரூர் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் வி.பி.மதியழகனின் ஜாமீன் மனு நேற்று (அக்.13ம் தேதி) விசாரணைக்கு வந்த நிலையில் நீதிபதி இளவழகன், இவ்வழக்கு சி.பி.ஐ.க்கு மாற்றப்பட்டுள்ளதால் தேதி குறிப்பிடாமல் விசாரணையை ஒத்திவைத்து உத்தரவிட்டுள்ளார்.

ரூ. 436 கோடியில் அமைகிறது:

# புதுச்சேரியில் உயர்மட்ட மேம்பாலம்: மத்திய அமைச்சர் கட்காரி அடிக்கல்

**புதுச்சேரி, அக். 14-**

புதுச்சேரியில் உயர்மட்ட மேம்பாலம் கட்டுவதற்கு நிதின் கட்காரி அடிக்கல் நாட்டினார்.

மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை மந்திரி நிதின் கட்காரி. இவர் நேற்று புதுச்சேரிக்கு வருகை தர உள்ளார். அவர் பல்வேறு அரசு வளர்ச்சி திட்டப்பணிகளை தொடங்கி வைப்பதுடன், புதிய திட்டங்களுக்கும் அடிக்கல் நாட்டினார்.

அதன்படி, புதுச்சேரியில் இந்திரா காந்தி சதுக்கத்தையும், ராஜீவ் காந்தி சதுக்கத்தையும் இணைக்கும் வகையில் 436 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட உள்ள புதிய உயர்மட்ட மேம்பாலத்திற்கு நிதின் கட்காரி அடிக்கல் நாட்டினார் மேலும், 2 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள 3 தேசிய நெடுஞ்சாலைகளையும் அவர் நாட்டிற்கு அர்ப்பணித்தார்.

கிழக்கு கடற்கரை சாலையில் 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்ற வளர்ச்சி திட்டப்பணிகளையும் நாட்டிற்கு அர்ப்பணித்தார். ரூ. 1,588 கோடியில் புதுச்சேரி, பூண்டியங்க்குப்பம் இடையே அமைக்கப்பட்டுள்ள தேசிய நெடுஞ்சாலையையும் அவர் திறந்து வைத்தார்.. இந்த நிகழ்ச்சியில் புதுச்சேரி கவர்னர் கைலாஷ்நாத், முதல்வர் ரங்கசாமி, மத்திய மந்திரி எல்.முருகன், தமிழக அமைச்சர் ஏ.வ.வேலு உள்பட பலர் பங்கேற்றனர்.

இலங்கை கடற்படையை கண்டித்து

# ராமேசுவரத்தில் 3-வது நாளாக வேலை நிறுத்த போராட்டம்

**ராமேசுவரம், அக். 14-**

இலங்கை கடற்படையை கண்டித்து ராமேசுவர மீனவர்கள் 3-வது நாளாக நேற்று வேலை நிறுத்த போராட்டம் நடைபெற்றது.

ராமேசுவரத்தில் இருந்து கடந்த 8-ந்தேதி மீன்பிடிக்க சென்ற 4 விசைப்படகுகள் மற்றும் அவற்றில் இருந்த 30 மீனவர்களை எல்லை தாண்டி சென்று மீன்பிடித்ததாக கூறி இலங்கை கடற்படையினர் கைது செய்து சிறையில் அடைத்தனர். இதே போல் காரைக்கால் மீனவர்கள் 17 பேரும் கைது செய்யப்பட்டனர். இதனையடுத்து ராமேசுவரம் மீன்வளத்துறை டோக்கன் அலுவலகம் அருகே கடந்த 10-ம் தேதி அனைத்து விசைப்படகு மீனவர்கள் சங்க ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் இலங்கை கடற்படை பறிமுதல் செய்த மற்றும் சேதம் அடைந்த படகுகளுக்கு அரசு உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என்றும் இலங்கை கடற்படையை கண்டித்தும், மத்திய-மாநில அரசுகளின் கவனத்தை ஈர்க்கும் வகையிலும் ராமேசுவரத்தில் விசைப்படகு மீனவர்கள் மீன்பிடிக்க செல்லாமல் காலவரையற்ற வேலை நிறுத்தம் செய்வது என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதன்படி, இலங்கை சிறையில் உள்ள ராமேசுவரம் மீனவர்களையும், படகுகளையும் விடுதலை செய்ய வலியுறுத்தி கடந்த 11-ம் தேதியில் இருந்து ராமேசுவரம் மீனவர்கள் காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த போராட்டம் நேற்று 3-வது நாளாகவும் தொடர்ந்து வருகிறது. வேலை நிறுத்தத்தால் 800-க்கும் மேற்பட்ட விசைப்படகுகள் நங்கூரமிட்டு நிறுத்தப்பட்டுள்ளன. வேலை நிறுத்தத்தால் நாள் ஒன்றுக்கு பல கோடி ரூபாய் வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது.

உ.பி.யில் பாலியல் வன்கொடுமை

# குற்றவாளி என்கவுன்டரில் சுட்டுக்கொலை

**லக்னோ, அக். 14-**

உத்திரபிரதேச மாநிலத்தில் பாலியல் வன்கொடுமையில் ஈடுபட்ட குற்றவாளி போலீஸ் என்கவுன்டரில் சுட்டுக்கொலை செய்தனர்.

உத்தரபிரதேச மாநிலம் மீரட் மாவட்டம் முகமதுபூர் கிராமத்தை சேர்ந்தவர் ஷாகித் (வயது 35). இவர் மீது சிறுமிகளை பாலியல் வன்கொடுமை செய்தது, கொள்ளை, கொலை மிரட்டல் உள்பட பல்வேறு வழக்குகள் நிலுவையில் உள்ளன. இதனிடையே தலைமறைவாக இருந்த ஷாகித்தை போலீசார் தீவிரமாக தேடி வந்தனர். மேலும், அவரின் இருப்பிடம் குறித்து தகவல் கொடுப்பவர்களுக்கு ரூ. 25 ஆயிரம் சன்மானமும் அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில், அம்மாநிலத்தின் பாக்பத் மாவட்டம் சரூர்பூர் கிராமத்தில் ஷாகித் பதுங்கி இருப்பதாக போலீசாருக்கு நேற்று ரகசிய தகவல் கிடைத்தது. இதையடுத்து , அப்பகுதிக்கு விரைந்து சென்ற போலீசார் தீவிர தேடுதல் வேட்டை நடத்தினர். அப்போது அங்கு பதுங்கி இருந்த ஷாகித், போலீசாரை தாக்கிவிட்டு தப்பியோட முயன்றார். இதையடுத்து, ஷாகித் மீது போலீசார் துப்பாக்கி சூடு நடத்தினர். இந்த துப்பாக்கி சூட்டில் ஷாகித் உயிரிழந்தார். இதனை தொடர்ந்து ஷாகித்தின் உடல் பிரேத பரிசோதனைக்காக அப்பகுதியில் உள்ள மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டது. என்கவுன்டர் நடந்த பகுதியில் போலீசார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

அமீபா மூளைக்காய்ச்சல்:

# கேரளாவில் மேலும் ஒரு பெண் பலி

**கேரளா, அக். 14-**

அமீபா மூளைக்காய்ச்சலுக்கு கேரளாவில் மேலும் ஒரு பெண் உயிரிழந்துள்ளார்.

கேரள மாநிலத்தில் கோழிக்கோடு, மலப்புரம், கண்ணூர் ஆகிய மாவட்டங்களில் அமீபா மூளைக்காய்ச்சல் பரவி மக்களை அச்சுறுத்தி வருகிறது. இந்த காய்ச்சல் பாதித்து கோழிக்கோடு மாவட்டம் தாமரைச்சேரி பகுதியை சேர்ந்த 9 வயது சிறுமி, 3 மாத குழந்தை உள்பட 7 பேர் உயிரிழந்து உள்ளனர். இந்தநிலையில் கோட்டயம் மாவட்டத்தை சேர்ந்த 48 வயது பெண் கடந்த ஒரு மாதத்துக்கு முன்பு கடும் காய்ச்சல், உடல் வலியால் தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றார். இருப்பினும், உடல்நலம் சரியாகாததால் கோட்டயம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

அங்கு பெண்ணின் உடலில் இருந்து மாதிரி சேகரித்து பரிசோதனை செய்ததில், அமீபா மூளைக்காய்ச்சல் பாதித்து இருப்பது உறுதியானது. பின்னர் அந்த பெண் சிறப்பு வார்டில் தீவிர சிகிச்சை பெற்று வந்தார். இருப்பினும், சிகிச்சை பலனின்றி பெண் கடந்த 3 தினங்களுக்கு முன்பு இரவு இறந்தார். இதன் மூலம் அமீபா மூளைக்காய்ச்சலுக்கு இறந்தவர்கள் எண்ணிக்கை 8 ஆக உயர்ந்து உள்ளது. இதையடுத்து பெண் வீட்டில் உள்ள கிணறு, அருகே உள்ள குளம் போன்ற நீர்நிலைகளில் இருந்து மாதிரி சேகரித்து ஆய்வுக்கு அனுப்பப்பட்டு உள்ளது. மேலும் கோழிக்கோடு அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அமீபா மூளைக்காய்ச்சல் பாதித்து 2 சிறுவர்கள் உள்பட 12 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# த.வெ.க. மாவட்ட செயலாளருக்கு 24-ம் தேதி வரை காவல் நீட்டிப்பு

**கரூர், அக். 14-**

கரூர் த.வெ.க. மாவட்ட செயலாளர் மதியழகனுக்கு வருகிற 24-ம் தேதி வரை காவல் நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.

கரூரில் கடந்த மாதம் 27ம் தேதி த.வெ.க. தலைவர் விஜய் பிரசாரம் மேற்கொண்டபோது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். இந்த சம்பவம் தொடர்பாக த.வெ.க. கரூர் மேற்கு மாவட்ட செயலாளர் மதியழகன் கைது செய்யப்பட்டுள்ளார். அவருக்கு அடைக்கலம் கொடுத்ததாக த.வெ.க. கரூர் நகர பொறுப்பாளர் பவுன்ராஜையும் போலீசார் கைது செய்துள்ளனர். கரூர் கூட்ட நெரிசல் த.வெ.க. பொதுச்செயலாளர் புஸ்சி ஆனந்த், த.வெ.க. மாநில இணை செயலாளர் நிர்மல் குமார் உள்பட சிலர் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

இதற்கிடையே, கரூர் கூட்ட நெரிசல் சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை சமீபத்தில் சென்னை ஐகோர்ட்டில் நடைபெற்றது. வழக்கை விசாரித்த நீதிபதி, த.வெ.க. தலைவர் விஜய் குறித்து கண்டனங்களை முன்வைத்தார். இதனையடுத்து, வழக்கை விசாரித்த நீதிபதி குறித்து சமூகவலைத்தளத்தில் அவதூறு கருத்துகள் பரப்பப்பட்டு வருகின்றன. அதேவேளை, அவதூறுகள் பரப்பியவர்கள் மீது வழக்குப்பதிவும் செய்யப்படுகினறன. அந்த வகையில் சென்னை ஐகோர்ட்டு நீதிபதி குறித்து சமூகவலைதளத்தில் அவதூறாக கருத்து பதிவிட்ட த.வெ.க. திண்டுக்கல் தெற்கு மாவட்ட செயலாளர் எஸ்.எம். நிர்மல்குமாரை போலீசார் நேற்று முன்தினம் கைது செய்தனர்.

இந்நிலையில், கைது செய்யப்பட்ட எஸ்.எம்.நிர்மல்குமார் நேற்று முன்தினம் திண்டுக்கல் கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட்டார். அவரை வரும் 24-ம் தேதி வரை நீதிமன்ற காவலில் அடைக்க நீதிபதி உத்தரவிட்டார்.

கரூர் சம்பவத்தில்

# நீதியை நிலைநாட்ட தொடர்ந்து பாடுபடுவோம்: ஆதவ் அர்ஜுனா

**சென்னை, அக். 14-**

கரூர் சம்பவத்தில் எத்தனை போராட்டங்களைச் சந்தித்தாலும் நீதியை நிலைநாட்டத் தொடர்ந்து பாடுபடுவோம் என ஆதவ் அர்ஜுனா தெரிவித்துள்ளார். மேலும், கரூரில் உயிரிழந்த உறவுகளின் குடும்பங்களுடன் எங்கள் பயணம் எப்போதும் தொடரும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கரூரில் த.வெ.க. தலைவர் விஜய் கடந்த மாதம் (செப்டம்பர்) 27-ந் தேதி பிரசாரம் செய்தபோது கூட்ட நெரிசல் ஏற்பட்டது. இதில் பெண்கள், குழந்தைகள் உள்பட 41 பேர் பலியான சம்பவம் நாட்டையே உலுக்கியது. இந்த சம்பவம் தொடர்பான வழக்கை சிபிஐ விசாரிக்க சுப்ரீம் கோர்ட்டு உத்தரவிட்டுள்ளது. இந்த நிலையில், த.வெ.க. தேர்தல் மேலாண்மை பொதுச்செயலாளர் ஆதவ் அர்ஜுனா வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:-

கரூரில் உயிரிழந்த எங்கள் உறவுகளின் குடும்பங்களுடன் எங்கள் பயணம் எப்போதும் தொடரும். எத்தனை சோதனைகள் வந்தாலும், எத்தகைய அதிகார வலிமையை எதிர்கொண்டாலும், எத்தனை போராட்டங்களைச் சந்தித்தாலும் நீதியை நிலைநாட்டத் தொடர்ந்து பாடுபடுவோம். வாய்மையே வெல்லும்! வாய்மையே வெல்லும்! வாய்மையே வெல்லும்! இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கரூர் துயர சம்பவம்:

# த.வெ.க. தலைமை அலுவலகத்தில் 16-ம் நாள் நினைவேந்தல் போஸ்டர்




**சென்னை, அக். 14-**

கரூர் சம்பவம்; த.வெ.க. தலைமை அலுவலகம் வெளியே 16-ம் நாள் நினைவேந்தல் போஸ்டர் ஒட்டப்பட்டு கடைப்பிடிக்கப்பட்டது.

கரூர் வேலுச்சாமிபுரத்தில் கடந்த மாதம் 27-ந்தேதி த.வெ.க. தலைவர் விஜய் பிரசாரம் மேற்கொண்டபோது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். இந்த சம்பவம் நாடு முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. இந்நிலையில், உயிரிழந்தவர்களின் 16-ம் நினைவு நாள் நேற்று கடைப்பிடிக்கப்பட்டது. இதனை முன்னிட்டு, சென்னையில் த.வெ.க. தலைமை அலுவலகத்திற்கு வெளியே நுழைவு வாசல் பகுதியில், அக்கட்சி சார்பில் போஸ்டர்கள் ஒட்டப்பட்டு உள்ளன. அதில், கரூர் கூட்ட நெரிசல் சம்பவத்தில் சிக்கி உயிரிழந்த 41 பேரின் புகைப்படங்கள் போஸ்டர்களில் இடம் பெற்று உள்ளன.

அதன் கீழே உங்கள் ஆன்மா சாந்தியடையட்டும். உங்கள் எண்ணங்கள் ஈடேற சபதம் ஏற்போம் என்ற வரிகள் எழுதப்பட்டு உள்ளன. பலியானவர்களின் பெயர்களுடன் மெழுகு வர்த்தி எரிவது போன்றும், புகைப்படம் இல்லாதவர்களின் இடங்களில் பூக்குடையும் இடம் பெற்று உள்ளன. கட்சியின் தலைமை அலுவலகத்திற்கு வெளியே போலீசார் பாதுகாப்பும் போடப்பட்டு உள்ளது.

கரூர் நெரிசல் வழக்கு:

# சி.பி.ஐ. விசாரணையை கண்காணிக்க ஓய்வுபெற்ற நீதிபதி நியமனம்

**சென்னை, அக். 14-**

கரூர் நெரிசல் வழக்கில் சி.பி.ஐ. விசாரணையை கண்காணிக்க ஓய்வு பெற்ற நீதிபதி நியமனம் செய்யப்பட்டுள்ளார்.



கரூரில் தமிழக வெற்றிக்கழக தலைவர் விஜய் பிரசாரத்தின்போது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். இதுகுறித்து சென்னை ஐகோர்ட்டு உத்தரவுப்படி ஐ.ஜி. அஸ்ரா கார்க் தலைமையிலான சிறப்பு புலனாய்வு குழு விசாரணை நடத்தி வருகிறது. இந்த சிறப்பு புலனாய்வு குழு விசாரணைக்கு தமிழக வெற்றிக்கழகம் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

சென்னை ஐகோர்ட்டு தனி நீதிபதி, கரூர் சம்பவம் தொடர்பாக விசாரணை குழு அமைக்க பிறப்பிக்கப்பட்ட உத்தரவுக்கு எதிராக சுப்ரீம் கோர்ட்டில் தமிழக வெற்றிக் கழகம் சார்பில் மனுதாக்கல் செய்யப்பட்டது. இந்த மனு மீதான விசாரணை சுப்ரீம் கோர்ட்டில் நடைபெற்றது. இந்த மனு, நீதிபதிகள் மகேஸ்வரி, அஞ்சாரியா ஆகியோர் கொண்ட அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது தமிழக போலீசை மட்டும் கொண்ட சிறப்பு புலனாய்வு குழு மீது எங்களுக்கு நம்பிக்கை இல்லை. எனவே ஓய்வு பெற்ற நீதிபதி தலைமையில் விசாரணை குழு அமைக்கப்பட வேண்டும் என்று தவெக தரப்பு வலியுறுத்தியது.

இந்நிலையில், இந்த வழக்கை நேற்று விசாரித்த உச்ச நீதிமன்றம், கரூர் கூட்ட நெரிசல் வழக்கை சி.பி.ஐ. விசாரணைக்கு மாற்றி உத்தரவிட்டது. இது இடைக்கால உத்தரவு மட்டுமே என்று தெளிவுபடுத்திய உச்சநீதிமன்றம், சி.பி.ஐ. விசாரணையை கண்காணிக்க ஓய்வுபெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி அஜய் ரஸ்தோகி தலைமையில் 3 பேர் குழு அமைக்கப்பட்டுள்ளது. விசாரணை குழுவில் 2 ஐ.பி.எஸ். அதிகாரிகள் இடம்பெறுவார்கள். எனினும் அவர்கள் தமிழ்நாட்டை பூர்வீகமாக கொண்டவர்களாக இருக்கக் கூடாது என்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ராஜஸ்தானைச் சேர்ந்த அஜய் ரஸ்தோகி, உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதியாக 2018 முதல் 2023 வரை பணியாற்றியவர். 2004 முதல் 2018 வரை ராஜஸ்தான் உயர் நீதிமன்ற நீதிபதியாகவும், 2018ல் திரிபுரா உயர் நீதிமன்ற தலைமை நீதிபதியாகவும் பணியாற்றி உள்ளார்.

உச்ச நீதிமன்றத்தில் தனது பதவிக் காலத்தில், ரஸ்தோகி 158 வழக்குகளை விசாரித்துள்ளார். குறிப்பாக ஜல்லிக்கட்டு விளையாட்டுக்கு ஆதரவாகவும், திருமணத்தை மீறிய உறவுகளை குற்ற மற்றதாக்குதல், கருணைக் கொலை உரிமைக்கு ஆதரவாகவும் பல முக்கிய தீர்ப்பு அஜய் ரஸ்தோகி வழங்கியுள்ளார்.

எடுத்துக்காட்டான காந்திய வாழ்வு:

# நூற்றாண்டு காணும் லட்சுமி காந்தனுக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து



**சென்னை, அக். 14-**

லட்சுமி காந்தன் பாரதியின் வாழ்க்கையை, இன்றைய தலைமுறை தனக்கான பாடமாகக் கொள்ள வேண்டும் என மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது:- விடுதலைப் போராட்ட வீரர் - மொழிப்போர்த் தீரர் நாவலர் சோமசுந்தர பாரதியாரின் பெயரன், விடுதலைப் போராட்டத் தியாகிகள் கிருஷ்ணசாமி பாரதி, லட்சுமி பாரதி ஆகியோரின் மகன் என நாட்டுக்காக உழைத்த குடும்பத்தின் வழித்தோன்றலாகப் பிறந்து, 16 வயது மாணவராக விடுதலைப் போராட்டத்தில் தொடங்கி, மதுரை மாவட்ட ஆட்சியர், தலைவர் கலைஞரின் முதல் தனிச் செயலாளர் எனப் பரந்த பெருவாழ்வுக்குச் சொந்தக்காரரான அவரை வாழ்த்தி மகிழ்கிறேன். நாட்டுப்பற்றில் உறுதி, மக்கள் தொண்டில் நாட்டம், எளிமை என நானிலமும் போற்றும் நற்பண்புகளைக் கொண்ட லட்சுமி காந்தன் பாரதியின் வாழ்க்கையை, இன்றைய தலைமுறை தனக்கான பாடமாகக் கொள்ள வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய அமைச்சர் பதவி வேண்டாம்:

# சுரேஷ் கோபி பேச்சால் சர்ச்சை

**கண்ணூர், அக். 14-**

மத்திய அமைச்சர் பதவி வேண்டாம், நடிக்க போகிறேன் சுரேஷ் கோபி பேச்சால் சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.



கேரளாவின் திரிச்சூர் தொகுதி எம்.பி.யாக இருப்பவர் சுரேஷ் கோபி. மலையாள திரைப்படங்களில் நடித்து ரசிகர்களின் மனதில் நீங்கா இடம் பிடித்தவர். கேரள திரையுலகில் தனக்கென்று தனியாக ரசிகர் பட்டாளம் ஒன்றை உருவாக்கி வைத்திருக்கிறார். தேர்தலில் பெற்ற வெற்றியை தொடர்ந்து, பா.ஜ.க. அரசில் மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு துறைக்கான இணை அமைச்சர் யாகவும் இருந்து வருகிறார்.

இந்நிலையில், அவர் கண்ணூர் நகரில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர், உண்மையில் நான் நடிப்பை தொடரவே விரும்புகிறேன். நான் இன்னும் நிறைய சம்பாதிக்க வேண்டும். என்னுடைய வருவாய் தற்போது முற்றிலும் நின்று விட்டது என்று கூறினார். நான் ஒருபோதும் அமைச்சர் யாக வேண்டும் என்று கேட்கவேயில்லை. தேர்தலுக்கு ஒரு நாள் முன்பு கூட, அமைச்சர் யாக எனக்கு விருப்பமில்லை. என்னுடைய நடிப்பையே தொடர விரும்புகிறேன் என்று செய்தியாளர்களிடம் கூறினேன் என்றார்.

பா.ஜ.க.வின் மிக இளம் வயது உறுப்பினர் என்று குறிப்பிட்ட அவர், மாநிலங்களவை உறுப்பினரான சதானந்தன் மாஸ்டரை அவருக்கு பதிலாக மத்திய அமைச்சர் யாக நியமிக்க வேண்டும் என்றும் கூறினார்.

இருமல் மருந்து விவகாரம்:

# கைதான ரங்கநாதன் வீட்டில் அமலாக்கத்துறை சோதனை

**சென்னை, அக். 14-**

இருமல் மருந்து விவகாரத்தில் கைதான ரங்கநாதன் வீட்டில் அமலாக்கத்துறையினர் அதிரடி சோதனையில் ஈடுபட்டனர்.



பச்சிளம் குழந்தைகள் இருமல் மருந்து குடித்ததால் பலியான சம்பவம் நாட்டையே உலுக்கியுள்ளது. மத்தியபிரதேசம், ராஜஸ்தான் மற்றும் மராட்டிய மாநிலங்களில்தான் இந்த சம்பவம் நடந்துள்ளது. இதில் மத்திய பிரதேசத்தில் மட்டும் குறிப்பிட்ட இருமல் மருந்து கொடுக்கப்பட்ட 22 குழந்தைகள் உயிரிழந்துள்ளது.


இத்தனை பிஞ்சு குழந்தைகளின் உயிரை குடித்த குறிப்பிட்ட இருமல் மருந்தின் பெயர் 'கோல்ட்ரிப்' என்பதாகும். இந்த மருந்து தயாரிக்கும் நிறுவனத்தின் பெயர் ஸ்ரீசன் பார்மா என்பதாகும். காஞ்சிபுரம் மாவட்டம் சுங்குவார்சத்திரத்தில் தான் இந்த மருந்து கம்பெனி உள்ளது. 22 குழந்தைகளை உயிர் பலி வாங்கிய சம்பவம் தொடர்பாக மத்தியபிரதேச மாநில தனிப்படை போலீசார் வழக்குப்பதிவு செய்தனர். கொலையில்லாத மரண சம்பவத்தை விளைவித்தல், கலப்பட மருந்து தயாரித்தல் ஆகிய 2 சட்டப்பிரிவுகளின் கீழ் போலீசார் வழக்கில் குற்றம் சாட்டியுள்ளனர்.

இதுதொடர்பாக விசாரணை நடத்த மத்தியபிரதேச மாநிலத்தில் இருந்து துணை போலீஸ் சூப்பிரண்டு பாரசியா ஜிதேந்திர ஜாட் தலைமையில் இன்ஸ்பெக்டர் ஜெகோட்டின் மேஸ்ராம் உள்ளிட்ட அதிகாரிகள் அடங்கிய தனிப்படை போலீசார் மருந்து நிறுவனத்தின் உரிமையாளர் ரங்கநாதன் (வயது 75), சென்னை கோடம்பாக்கம் நாகார்ஜூனாநகர் 2-வது தெருவில் உள்ள அவரது வீட்டில் வைத்து கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில், சென்னையில் ஸ்ரேசன் பார்மா மருந்து நிறுவன உரிமையாளர் ரங்கநாதன் வீடு மற்றும் அவருக்கு தொடர்புடைய இடங்களில் அமலாக்கத்துறை அதிகாரிகள் சோதனை நடத்தினர். இருமல் மருந்து சாப்பிட்டு 22 குழந்தைகள் உயிரிழந்த விவகாரம் தொடர்பாக இந்த சோதனை நடந்தது. இதைபோல மருந்து கம்பெனியை முறையாக கண்காணிக்கவில்லை என பணியிடைநீக்கம் செய்யப்பட்ட அதிகாரிகள் தீபா ஜோசப் மற்றும் கார்த்திகேயன் வீடுகளிலும் அமலாக்கத்துறை அதிகாரிகள் சோதனை நடத்தினர்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



த.வெ.க. கரூர் வழக்கில் அஸ்ரா கர்க் தலைமையிலான விசாரணை வேண்டாம் என்று நீதிமன்றத்தில் கூறுகிறது. விசாரணை தொடங்கவே இல்லை, அதற்குள் சி.பி.ஐ.க்கு மாற்றப்பட்டுள்ளது. சி.பி.ஐ. விசாரணையை நாங்கள் எப்போதும் ஏற்பதில்லை. மாநில உரிமை, தன்னாட்சிக்கு எதிரானது.

**- சீமான்**



சாதியப் பெயர்கள் கூடாது என்ற நிலைப்பாட்டை தமிழக அரசு எடுத்து உள்ளது தமிழ்நாட்டில் பல சமுதாயங்களின் அடையாளங்களை அழிக்கும் செயலாக உள்ளது. சமூக அடையாளத்துடன் காலங்காலமாக இருக்கின்ற இந்த பெயர்களை எல்லாம் நீக்குவது தமிழக மக்கள் இடத்தில் குழப்பத்தையும், முரண்பாடுகளையுமே ஏற்படுத்தும்.

**- ராமதாஸ்**




கரூர் வழக்கு என்பது கட்சி சம்பந்தப்பட்டது அல்ல. 41 உயிர்கள் சம்பந்தப்பட்டது. கரூர் வழக்கு சி.பி.ஐ.க்கு மாற்றப்பட்டதில் மகிழ்ச்சி. கரூர் சம்பவத்தில் சீமான் பதற்றப்படுவது ஏன்? திருப்புவனம் கோவில் காவலாளி அஜித்குமார் வழக்கை சி.பி.ஐ.க்கு கொடுத்தார்கள். இந்த விவகாரத்தில் அரசியல் செய்வது நாங்கள் இல்லை.

**- அண்ணாமலை**



இந்திய ரிசர்வ் வங்கி அறிமுகப்படுத்திய புதிய காசோலை உடனடி தீர்வு முறை, வாடிக்கையாளர்களுக்கு பெரிதும் தலைவலியாக மாறியுள்ளது. இந்திய ரிசர்வ் வங்கி மற்றும் சம்பந்தப்பட்ட வங்கிகள் உடனடியாக நடவடிக்கை எடுத்து, அனைத்து காசோலைகளையும் நேரத்துக்கு தீர்வு செய்ய வேண்டும்.

**- செல்வப்பெருந்தகை**



● சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று சட்டத்துறை சார்பில் மதுரை அரசு சட்டக்கல்லூரியில் ரூ.48 கோடியே 20 லட்சத்து 50 ஆயிரம் செலவில் கட்டப்பட்டுள்ள கல்விசார் மற்றும் நிர்வாக தொகுதி கட்டிடங்கள் மற்றும் வேலூர் அரசு சட்டக்கல்லூரியில் ரூ.6 கோடியே 46 லட்சத்து 85 ஆயிரம் செலவில் தரை மற்றும் 2 தளங்களுடன் கட்டப்பட்டுள்ள நூலகக்கட்டிடம் ஆகியவற்றை காணொலிக்காட்சி வாயிலாக முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர் துரைமுருகன் மற்றும் நா.முருகானந்தம், சி.ஜார்ஜ் அலெக்சாண்டர், ஜெ.விஜயலட்சுமி ஆகியோர் உள்ளனர்.



● சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறையின் சார்பில் தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் தொழில் பூங்காக்களில் அமைத்துள்ள 16 புதிய குழந்தைகள் காப்பகங்கள், ரூ.120 கோடி செலவில் விழுப்புரம் மாவட்டத்தில் 157.91 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள திண்டிவனம் மெகா உணவு பூங்கா மற்றும் ரூ.70 கோடி செலவில் தேனி மாவட்டத்தில் 123.49 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள தேனி மெகா உணவு பூங்கா ஆகியவற்றை காணொலிக்காட்சி வாயிலாக முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

### இந்து சமய அறநிலையத்துறை சார்பில்

# 92 கோடி ரூபாய் மதிப்பில் புதிய முடிவுற்ற பணிகள்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்

சென்னை, அக். 14-

இந்து சமய அறநிலையத் துறை சார்பில் ரூ.92 கோடி மதிப்பிலான 5 புதிய திட்டப் பணிகள் மற்றும் முடிவுற்ற பணிகளை நேற்று முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

இந்து சமய அறநிலையத் துறையானது தனது கட்டுப் பாட்டிலுள்ள திருக்கோவில் களில் திருப்பணிகள் மேற் கொண்டு, குடமுழுக்குகள் நடத்துதல், திருத்தேர் மற்றும் திருக்குளங்களை சீரமைத்தல், பக்தர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை மேம் படுத்தி வழங்குதல், திருக்கோ விலுக்கு சொந்தமான சொத் துக்களை ஆக்கிரமிப்பாளர்க ளிடமிருந்து மீட்டெடுத்து பாதுகாத்தல் போன்ற பல் வேறு பணிகளை மேற் கொண்டு வருகிறது.

அத்துடன் துறையில் அவ் வபோது ஏற்படும் காலிப் பணியிடங்கள் தமிழ்நாடு அர சுப் பணியாளர் தேர்வாணை யத்தின் மூலம் நிரப்பப்பட்டு வருகின்றன.

அவ்வகையில், கோயம் புத்தூர் மாவட்டம், மருதம லை, சுப்பிரமணியசுவாமி திருக்கோவிலில் பெருந் திட்ட வரைவுப் பணிகளின் கீழ் 33.63 கோடி ரூபாய் மதிப் பீட்டில் திருக்கோவிலின் மலைமேல் மற்றும் அடிவா ரத்தில் பக்தர்களுக்கான ஒருங் கிணைந்த அடிப்படை வசதி களுக்கான கட்டுமானப் பணி கள்; வேலூர் மாவட்டம், விரிஞ்சிபுரம், மார்க்கபந்தீஸ் வரர் திருக்கோவிலில் 4.38 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருக்கோவில் திருப்பணிகள் நாமக்கல் மாவட்டம், குன்ன மலை, வல்லீஸ்வரர் திருக்கோ விலில் 3.69 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருக்கோவில் திருப்பணிகள் 1.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பெரம் பலூரில் உதவி ஆணையர் அலுவலகம் கட்டும் பணி என மொத்தம் 43.20 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 5 புதிய திட்டப் பணிகளுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலி காட்சி மூலம் அடிக்கல் நாட்டி, பணிகளை தொடங்கி வைத்தார்.

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் சுப்பிரமணியசு வாமி திருக்கோவிலில் 15.67 கோடி ரூபாய் செலவில் கட் டப்பட்டுள்ள அன்னதானக் கூடம், சலவைக் கூடம் மற் றும் புனரமைக்கப்பட்ட நாழிக்கிணறு ஈரோடு மாவட் டம், சென்னிமலை, சுப்பிரம ணியசுவாமி திருக்கோவிலில் 8.27 கோடி ரூபாய் செலவில் சீரமைக்கப்பட்ட மலைப் பாதை தார்சாலை மற்றும் புதிய பசுக்கள் காப்பகம், பக் தர்களுக்கான பேருந்து காத்தி ருப்பு கூடம் திருவண்ணா மலை மாவட்டம், திருவண் ணாமலை, அருணாசலேசுவ ரர் திருக்கோவிலில் 10.47 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கோபுரங் கள் மற்றும் விமானங்களை வண்ண விளக்குகளால் ஒளி ரூட்டுதல் மற்றும் ஒருங்கி ணைந்த பசுக்கள் காப்பகம், திண்டுக்கல் மாவட்டம், பழனி, தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவிலில் 3.52 கோடி ரூபாய் செலவில் கட் டப்பட்டுள்ள திருக்கோவில் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் இரண்டு கலைக் கல்லூரிக ளில் மொழி ஆய்வுக் கூடங் கள் மற்றும் இடும்பன் திருக் கோவில் முடிக் காணிக்கை மண்டபம் 3 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள காஞ்சிபுரம் மண்டல இணை ஆணையர் அலுவலகத்தை காணொலி காட்சி மூலம் முதல்வர் திறந்து வைத்தார்.

திருச்சிராப்பள்ளி மாவட் டம் ஸ்ரீரங்கம், அரங்கநாதசு வாமி திருக்கோவிலின் ஜவுளி ரெங்கசாமி கட்டளை தோப்பில் 2.50 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட பசும டம்; ஈரோடு மாவட்டம், பண்ணாரி, பண்ணாரி மாரி யம்மன் திருக்கோவிலில் 1.92 கோடி ரூபாய் செலவில் கட் டப்பட்டுள்ள கிரில் அமைப் புடன் கூடிய சுற்றுசுவர் உத்தி ரமேரூர், மதுராந்தகம், வேட சந்தூர், ஆத்தூர், உசிலம்பட்டி, திருத்துறைப்பூண்டி, திருக்கு வளை ஆகிய இடங் களில் 1.56 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 13 ஆய்வர் அலுவலகங்கள் காஞ்சிபுரம் மாவட்டம், திரு நீர்மலை, ரெங்கநாதப் பெரு மாள் திருக்கோவிலில் 1.90 கோடி ரூபாய் செலவில் கட் டப்பட்டுள்ள அர்ச்சகர் மற் றும் பணியாளர் குடியிருப்பு என மொத்தம் 48.81 கோடி ரூபாய் செலவிலான 27 முடி வுற்ற பணிகளை காணொலி காட்சி மூலம் முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத் தார்.

தமிழ்நாடு அரசுப் பணி யாளர் தேர்வாணையத்தால் இந்து சமய அறநிலையத்து றையின் பொறியியல் பணி யில் உதவி பொறியாளர் (மின்) பணியிடத்திற்கு தேர்வு செய்யப்பட்ட 12 நபர்களுக் கும், பொறியாளர் சார்நிலை பணியில் இளநிலை வரைதொ ழில் அலுவலர் பணியிடத் திற்கு தேர்வு செய்யப்பட்ட 29 நபர்களுக்கும், அமைச்சுப் பணியில் உதவியாளர் பணி யிடத்திற்கு தேர்வு செய்யப் பட்ட 42 நபர்களுக்கும், என மொத்தம் 83 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை முதல்வர் வழங்கினார்.




● சென்னை காரம்பாக்கம் நவரத்தன்மல் ஜெயின் வளாகத்தில் நேற்று நடைபெற்ற விழாவில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில் பயனாளிகளுக்கு வீட்டுமனை பட்டாக்களை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார். நிகழ்ச்சியில் அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், சு.முத்துசாமி, மா.சுப்பிரமணியன், மேயர் ஆர்.பிரியா, எம்.எல்.ஏக்கள் க.கணபதி, ஜோசப் சாமுவேல், நா.எழிலன், இரா.மூர்த்தி, ஏ.எம்.வி.பிரபாகரராஜா உள்ளனர்.

## மதுரவாயலில் 1,600 பேருக்கு...(1-ம் பக்க தொடர்ச்சி)

கூடுதலாக இருக்கும். இன் றைக்கு உங்களுடைய கஷ்டங் களையெல்லாம், உங்களு டைய பதட்டங்களையெல் லாம் போக்கி பட்டா கொடுப் பதற்காக நாங்கள் அத்தனை பேரும் உங்களைப் பார்ப்பதற் காக வந்திருக்கின்றோம்.

பட்டா கிடைப்பதினால், உங்களுடைய வீடுகளில் நிம் மதியாக, உங்கள் குடும்பத்து டன் மகிழ்ச்சியோடு நீங்கள் தூங்கப் போகலாம், பட்டா என்பது உங்களுடைய நெடு நாள் கோரிக்கை மட்டுமல்ல, அது உங்களுடைய உரிமை. இன்றைக்கு நம்முடைய முதல்வர், நம்முடைய திரா விட மாடல் அரசு உங்களு டைய அந்த உரிமையை நிலைநாட்டி இருக்கின்றது.

சென்னை மட்டுமல்ல, பிற மாவட்டங்களிலும் புறம் போக்கு நிலத்தில் வசிக்கின்ற மக்களுக்கும் உடனடியாக பட்டா வழங்கவேண்டும் என்று நம்முடைய முதல்வர் உத்தரவிட்டிருக்கின்றார். இப் படி ஏழை, எளிய மக்களு டைய முன்னேற்றத்திற்காக கலைஞர் வழியில் நம்மு டைய முதல்வர் தொடர்ந்து உழைத்துக் கொண்டிருக்கிறார்.

இன்றைக்கு பல முற் போக்கான திட்டங்களின் கார ணமாக, இந்தியாவிலேயே நம் முடைய மாநிலம் 11.19 சதவீ தம் வளர்ச்சியோடு இந்தியா விலேயே முதல் இடத்தில் நம் முடைய தமிழ்நாடு சிறப்பாக விளங்கிக் கொண்டிருக்கிறது என்று அவர் தெரிவித்தார். இவ்வாறு அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## 11-ம் வகுப்பு பொதுத்தேர்வு...(1-ம் பக்க தொடர்ச்சி)

இனி கிடையாது என மாநில பள்ளிக்கல்வி கொள்கையில் தெரிவிக்கப்பட்டது.

இந்த தேர்வை ஒவ் வொரு ஆண்டும் சுமார் 8 லட் சம் மாணவ-மாணவிகள் எழுதி வந்த நிலையில் தேர்வு ரத்து என்ற அறிவிப்பால் பிளஸ்-1 மாணவ-மாணவிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

இந்நிலையில், தமிழ்நாடு மாநில கல்விக் கொள்கை 2025ஐ செயல்படுத்தும் விதமாக 11-ம் வகுப்பு பொதுத்தேர்வை ரத்து செய்து தமிழக அரசு அரசா ணையில் வெளியிட்டுள் ளது.

அதில், நடப்பு கல்வி யாண்டு முதல் 12-ம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ் மட்டும் வழங்கப்படும் என் றும் முந்தைய 11-ம் வகுப்பு பொதுத்தேர்வில் தோல்விய டைந்த மாணவர்கள் 2030-ம் ஆண்டு வரை அரியர் தேர்வு எழுதலாம் எனவும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

## ரூ.190 கோடியில் திண்டிவனம்...(1-ம் பக்க தொடர்ச்சி)

மானாமதுரை, ஒரகடம், பிள் ளைப்பாக்கம், ஓசூர், கங்கை கொண்டான் ஆகிய 16 தொழில் பூங்காக்களில் நிறு வப்பட்டுள்ள குழந்தைகள் காப்பகங்கள் தமிழ்நாடு முதல்வரால் நேற்று காணொலி வாயிலாக திறந்து வைக்கப்பட்டன.

இந்த குழந்தைகள் காப்ப கங்களை, தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம், இந் திய வர்த்தக சபைகளின் கூட் டமைப்பு மற்றும் தொழில் துறை மகளிர் அமைப்பு ஆகி யவற்றுடன் இணைந்து உரு வாக்கி உள்ளது.

தொழில் பூங்காக்களில் பணிபுரியும் பெற்றோர்கள், குறிப்பாக தாய்மார்களின் குழந்தை பராமரிப்பு சுமையை குறைக்க ஏதுவாக பணிபுரியும் இடத்திற்கு அரு கில், பாதுகாப்பான மற்றும் ஆதரவான சூழலமைப்புடன் இக்காப்பகங்கள் அமைக்கப் பட்டுள்ளன.

### மெகா உணவு பூங்காக்கள்:

தமிழ்நாடு அரசின் சிப் காட் நிறுவனம், மாநிலத்தில் உணவுசார் உற்பத்தி நிறுவ னங்களை ஊக்குவிக்கும் நோக்கில் மணப்பாறை, திண் டிவனம் மற்றும் தேனி ஆகிய மூன்று மாபெரும் உணவுப் பூங்காக்களை உருவாக்கியுள் ளது. 138 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்ட மணப் பாறை மெகா உணவு பூங்கா 29.12.2022 அன்று முதல்வரால் திறந்து வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

### திண்டிவனம் மெகா உணவு பூங்கா:

அதன் தொடர்ச்சியாக, விழுப்புரம் மாவட்டம், திண் டிவனத்தில் கொள்ளார் மற் றும் பெலாகுப்பம் ஆகிய கிராமங்களை உள்ளடக்கிய 157.91 ஏக்கர் பரப்பளவில் 120 கோடி ரூபாய் செலவில் உரு வாக்கப்பட்டுள்ள திண்டிவ னம் மெகா உணவு பூங்கா வினை முதல்வர் நேற்று திறந்து வைத்தார். இப்பூங்கா வில், 3 தொழிற்சாலைகளுக்கு 36.05 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்து, 123.84 கோடி ரூபாய் முதலீடுகளை ஈர்த்து, 350 தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட உள் ளது. அத்துடன் தகுதி வாய்ந்த தொழில் நிறுவனங்கள் தொழில் துவங்க 55.59 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்திட தயார் நிலையில் உள்ளது.

### தேனி மெகா உணவு பூங்கா:

தேனி மாவட்டத்தில் உப் பார்பட்டி, தப்புகுண்டு மற் றும் பூமலைகுண்டு ஆகிய கிராமங்களை உள்ளடக்கிய 123.49 ஏக்கர் பரப்பளவில் 70 கோடி ரூபாய் செலவில் உரு வாக்கப்பட்டுள்ள தேனி மெகா உணவு பூங்காவினை முதல்வர் நேற்று திறந்து வைத்தார்.

இப்பூங்காவில், 11 தொழிற்சாலைகளுக்கு 45.97 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்து, 160.53 கோடி ரூபாய் முதலீடுகளை ஈர்த்து, 700 தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப் பட உள்ளது. அத்துடன் தகுதி வாய்ந்த தொழில் நிறு வனங்கள் தொழில் துவங்க 27.34 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்திட தயார் நிலையில் உள்ளது.

இவ்வாறு அதில் தெரி விக்கப்பட்டுள்ளது.




● சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் செயல்பாடுகள் குறித்து ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பி.கீதாஜீவன், தலைமைச்செயலாளர் நா.முருகானந்தம், கூடுதல் தலைமைச்செயலாளர்கள் மங்கத்ராம் சர்மா, பிரதீப்யாதவ், முதன்மைச்செயலாளர் த.உதயச்சந்திரன், செயலாளர் எஸ்.மதுமதி, ஆணையர் எம்.லட்சுமி ஆகியோர் கலந்து கொண்டனர்.


# 2026-ம் ஆண்டில் ஆசிரியர்களுக்கு மூன்று முறை சிறப்பு டெட் தேர்வு

## தமிழக பள்ளி கல்வித்துறை உத்தரவு

சென்னை, அக். 14-

2026-ம் ஆண்டில் ஆசிரியர் களுக்கு 3 முறை சிறப்பு டெட் தேர்வுக்கு தமிழக பள்ளி கல் வித்துறை உத்தரவிட்டுள்ளது.

தமிழகத்தில் உள்ள அரசு பள்ளிகளில் பணிபுரிந்து வரும் ஆசிரியர்களும் டெட் தேர்வு தேர்ச்சி பெற்றிருப்பது கட்டாயம் என அண்மையில் சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்டு இருந்தது. இதனால் பல ஆயி ரக்கணக்கான ஆசிரியர்கள் இது தொடர்பாக தமிழக அரசு முறையான வழிகாட்டுதல் களை வெளியிட கோரிக்கை விடுத்து வந்தனர். இந்த நிலை யில் தமிழக பள்ளிக் கல்வித் துறை முக்கிய அறிவிப் பாணை ஒன்றை வெளியிட் டுள்ளது. அதன்படி அடுத்த 2026-ம் ஆண்டு முதல் 3 முறை சிறப்பு டெட் தேர்வு நடத்தப் படும் என்று தெரிவித்துள்ளது. அதாவது அடுத்த ஆண்டு ஜன வரி, ஜூலை மற்றும் டிசம்பர் ஆகிய 3 மாதங்களில் சிறப்பு டெட் தேர்வு நடத்தப்படும் என பள்ளி கல்வித்துறை தெரி வித்துள்ளது. மேலும் சிறப்பு ஆசிரியர் தகுதித் தேர்வு நடத்த ஆசிரியர் தேர்வு வாரிய தலை வருக்கு தமிழக பள்ளிக் கல் வித்துறை அனுமதி அளித்தும் உத்தரவிட்டுள்ளது.




● சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை சார்பில் திருவண்ணாமலை மாவட்டம் ஜவ்வாதுமலை, கரூர் மாவட்டம் பொன்னணியாறு அணை மற்றும் நாமக்கல் மாவட்டம் கொல்லிமலை ஆகிய இடங்களில் சுற்றுலா தலங்களை உலகத்தரத்தில் மேம்படுத்தும் நோக்கில் ரூ.7.46 கோடி செலவில் முடிவுற்ற 4 திட்ட பணிகளை திறந்து வைத்து ரூ.16.30 கோடி மதிப்பீட்டிலான 5 புதிய திட்டப்பணிகளுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர் ஆர்.ராஜேந்திரன், தலைமைச்செயலாளர் நா.முருகானந்தம் உள்ளனர்.



● சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் தமிழ்நாட்டில் உர இருப்பு மற்றும் உர விநியோகம் தொடர்பான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வேளாண் உற்பத்தி ஆணையர் வ.தட்சிணாமூர்த்தி, வேளாண் விற்பனை ஆணையர் த.ஆபிரகாம், வேளாண்மை இயக்குநர் பி.முருகேஷ், தோட்டக்கலைத்துறை இயக்குநர் பி.குமரவேல்பாண்டியன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.